GOVERNMENT OF INDIA
NATIONAL LIBRARY, CALCUTTA

Class No. Ta 894.8111

Book No. A 727

N. L. 38.

MGIPC—S1—36 LNL/60—14-9-61—50,000.

NATIONAL LIBRARY

This book was taken from the Library on the date last stamped. A late fee of 1 anna or 6 nP. will be charged for each day the book is kept beyond a month

N. L. 44.
MGIP Santh.—S1—34 LNL34/58—19-6-59—50,000

Re1/-
Ta
894.8111
A 727
SHELF LISTED
NATIONAL LIBRARY
7058
7.7.62
CALCUTTA

உ

கடவுள்துணை.

# அரிச்சந்திர வெண்பா.

## பாயிரம்.

### காப்பு.

சங்கிரக மாக வரிச்சந் திரன்சரிதம்
பொங்குமுதற் பாவாற் புகலுதற்குத்—தங்கமுடி
யாறுடையா னம்பொ னடியிணைக ணற்றுணையா
ஆறுடையா வெற்றிங் குறும. (க)

### அவையடக்கம்.

ஞைகத்தலங்க ளில்லான் கடைந்து பயோததியைப்
புத்தமிழ்தந் தானளித்தல் போன்மணிற்சேர்—வைத்த
வரிச்சந் திரன்சரிதை யாய்ந்துணர்வொன் றில்லேன்
றிரட்டிச் சொலுமிச் செயல். (க)

கற்றுணர்ந்த மேலோர் கருதார்க ளிந்நூலிற்
குற்றமுன வேனு நிது கொள்வாரா—புற்பூலவி
னெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கு முண்டு. (உ)

பாயிரம் முற்றிற்று. ஆ. ௩.

# அரசாட்சிக்காண்டம்.

---

## க-வது நாட்டுச்சிறப்பு.

திங்கள் வழியுதித்த பாண்டவர்தஞ் சீர்நாடு
மங்கிழந்து சூதி லடவிநண்ணித்—தங்கவலட்
காலற் கடந்ததவ வன்னிவரக் கண்டவனைக்
காலிறைஞ்சி நின்றார் கனிந்து. (க)

நின்றானை முன்னவனை நீத்தவன்வாழ்த் தாநோக்கிக்
குன்றாதி வெந்துயராற் கோமானே—யன்றாழி
யின்னிலுந்தன் புற்றா னிருபனரிச் சந்திரனென்
றன்னவற்கிக் காதைவிள்வா னுய்ந்து. (உ)

அம்போ ருகசதனத் தன்னம்போ லும்பொழிய
வம்போதி யார்க்கெழிலி நல்கமிழ்தம்—பம்போடி
வண்சரயு வாயொழுக வான்பயிர்நீள் கோசலமென்
றொண்சிறப்பி னோர்பொழிலிங் குண்டு. (௩)

தானந் துயர்ந்ததன்ன தானந் தகைச்சுடர்க்குண்
ஞானந் தலிச்சுடரா ஞாலத்தே—நீத்த
மாட்டிற்செய் வோர்செல்வர் மன்னுமற வோரமரு
நாட்டிற்றுட் கோசலமா நாடு. (௪)

ஓதலுறி னெண்பொருளா னெல்கா விளைவதனாற்
காதலுறு மாலைத்தாய்க் காய்பசிநோ—யீதகளோ
டேசறுறும் பல்குழுவன் நீர்புனலுங் கொண்டிலங்குங்
கோசலமாங் கோட்டங் குறித்து. (௫)

க-வது நாட்டுச்சிறப்பு முற்றிற்று. ஆ. அ.

---

## உ-வது நகரச்சிறப்பு.

வேலை நிரைகிடக்கும் வேண்டார்க் கணுகரிய
கோல மிருபொறியுங் கோட்டிமயம்—போலிடமு
முன்னரமுக் திண்மையுமுற் றோங்குமதி லாற்பொலியு
நன்ன ரயோத்தி நகர். (௬)

நார்த்தகவேல் வீரரொடு நற்றுரக நால்வாய்தேர்
சேர்ந்தணையத் தந்துந் திறையுய்ப்பான்—போந்த
முடியணியும் பல்வேந்தர் மொய்குழாந் தன்னாங்
கடிநகரக் கோபுரவாய்க் கண். (௨)

ஆரணமுன் னூற்பயில்வோ ரார்ப்பும் விழாவியமுங்
கூரணவும் வேல்விழியார் கூத்தொலியுங்—காரண
கடியமுர சோதையன்றிக் காரளக்கப் பாடில்
கொடியமதிற் கோபுரமூ தூர். (௩)

மலர்ந்தமுகத் தின்சொல் வழங்கி யெவர்க்குங்
கலந்தவிருந் தேற்றயலான் காந்தை—நலம்வெறுத்துத்
தீங்குபுரிந் தார்க்குநயஞ் செய்துநடு நின்றொழுகா
ராங்கிலழுக் காற்றை யறுத்து. (௪)

சந்த மலர்மணத்தாற் சார்ந்துமுரல் வண்டினத்தக்
குந்தமர மெல்லாந்தே னூட்டுதலாற்—புந்திதிரு
மந்நகரத் தார்வரையா தன்னியநாட் டாதுலர்க்குப்
பொன்னளிப்ப ரென்றுபுகழ் வெண். (௫)

வெற்புற்ற வாரநகில் வெண்டா மரையாளும்
பொற்புற்ற செங்கமலப் பொன்னுமல்லாற்—கற்பற்றுப்
புல்லரையும் வீழ்ந்து புணருமவ ரொஞ்ஞான்று
மில்லொழுகு நல்லார்க்கு ளில். (௬)

எல்லார்க்கு மெண்ணு மெழுத்துமெனு மிவ்விரண்டா
மெல்லாரு நோக்குமியற் கேள்வியெனச்—சொல்லாருங்
காது மிருத்தலினாற் கண்ணில்லார் காதில்லா
ரோத வொருவரங்குண் டோ. (௭)

முப்புரிநூன் மார்பர் முதுமறையிற் செய்மகத்தி
னப்புகையு மாளிகைக்க ணன்னமன்னூர்—றொப்பரிலேம்
பாஃபுலர்த்த விட்டவகிற் பைம்புகையுங் கன்றூற்று
மலப்பயத்தி னேமெமெழு வான். (௮)

தங்கவெள்ளிக் குன்றனைய தோற்றமுறு மாளிகையி
னங்கணத்தி லாடுமகார் வீசியகேழ் - பொங்குமணி
வீதிதொறு மென்று மிளிர்தலினு லப்பதியை
மீதிமையார் நோக்குவர்விண் ணோர். (௯)

ஓதப் புரத்து ளுறைய மறுதொழிலோ
ராதிச் சதுர்வருணத் தாரையணைஇ - நீதிபுரி
வான்றவனவ் வங்கிசத்தான் வண்டார்த் திரிசங்கு
வான்றவநன் ஈன்ற மகன். (௧௦)

கல்விப் பெரும்பரவைக் கங்குகண்டோன் சீர்சொருபன்
சொல்லைப் புரிந்தநிரஞ் சொல்லுவோ - னெல்லவர்க்குங்
காட்சிக் கெளியன் கதனைத்துப் பின்னிடையா
மாட்சிக் கடறபடையான் மன். (௧௧)

ஆறுகலைவ யில்லா னமர்ந்த முடிகளிடை
யாறிலொரு பங்குகொள்வா னுண்மையுளான் - கூறுத
தாயிசலைத் தண்டிப்பான் முவா வறம்புரிவான்
வேய்களைவிட் டாய்வான் விரைந்து. (௧௨)

வாய்மைபகர் வாயான் மதியமைச்சர் கைப்புனைய
நேயமொடு கேட்கு நெடுஞ்செவியான் - மீயுலகுங்
கர்நாநேர் கையான் கருமந் தரப்புயத்தா
னத்திலரு ளூட்டத்தா னுல். (௧௩)

ஆர்மன்னர் கோமா னரிச்சந் திரனென்பான்
சீர்மன்னு மன்னுன் சிரத்துமுடி - யேர்மன்ன
சோதிடங்கண் மாமறையோர் சொல்லக் கவிகண
ரோதிடவு மங்கலத்தை யோர்ந்து. (௧௪)

தொல்லமைச்சர் முன்னோர் தொழுது பணிசெப்ப
மெல்லியலா ரொண்கவரி வீசவொளிர் - கல்லிழைத்த
சிங்கா தனத்தே செழுங்கவிகைக் கீழிருந்தான்
பொங்கா தவன்போற் பொலிந்து. (௧௫)

உ-வது நகரச்சிறப்பு முற்றிற்று ஆ. ௨௩.

அரசாட்சிச்சாண்டம் முற்றிற்று.

---

# விவாககாண்டம்.

அக்காலைப் பற்றிசக்ந வந்தணரச் சாணியின்கட்
புக்கா ருடனெழுந்த பூபாலன் - மிக்கார்தம்
பாதமலர் சூடிப் பகாசி பெற்றவர்க்கொள்
ளாதனமன் பிட்டிருந்தி யார்ந்து. (௧)

ஐந்தவியா வற்பகலு மானந்தத் தேன்பருகுஞ்
சந்த மறைமுனிவீர் சாற்றிடுமி - னந்தவுற
மெய்ப்பொழிலிற் சென்றடைந்தீ ரொப்புனித நீர்குடைந்தீ
ரொப்புதமை கண்ட ரியைந்து. (௨)

என்றுரைப்பக் கேட்டறவோ ரெமகிரி போல்வயனென்
னன்றிருக்குங் கன்னோசி நாடதனிற் - றுன்றழுக்கிர்
கண்டகியிற் புக்காடிக் காணியகின் வாண்முகத்தை
யண்டினமீங் கின்னுங்கே ளாங்கு. (௩)

கன்னபுரி யென்னுங் கடிநகரை யாள்கின்ற
மன்னன் மதிமருமான் சோமநயன் - சென்னிநதி
யாரிணங்க வைத்தா னருள்வரத்தா லிந்துமதிப்
பேரணங்கைத் தானெடுத்தான் பெற்று. (௪)

நிம்பாற் கடலுண்ட செல்வன்ற னம்மான்வீழ்
காம்பாருந் தோண்மடந்தை கற்பகனி - யூம்பயிர்ப்பு
நாணமட நாற்குணனு நண்ணகத்தம் மாநெழிலிற்
பூணைலைப் புண்டரிகப் பொன். (௫)

காரிகைக்கு நீள்கருங்கட் கஞ்சமல ரானனத்துக்
காரிகைக்குக் கல்யாணங் கண்டுகொடேன் - காரிகைக்கு
மன்னனந்த னெம்மான் குறித்தமகற் கன்றியெனச்
சொன்னதுண்டம் மானிசைகின் றேட்கு. (௬)

என்றூர் முறைநிறம்பா வேந்தலரிச் சந்திரன்மால்
வென்றூர் பொழிவளியான் வெங்காமத் - தன்றூர
வோங்கியுளந் தீக்கிறை யோர்ப்பறிவோ டொண்பொறையு
நீங்கியுட னின்றான் றளர்ந்து. (௭)

பின்னரந்த மோகமெனப் பேரழலை யுண்மைபுணர்
வென்னளிர்நீ ரானவியா வேந்தயிற்கை - மன்னவர்கோன்
றிண்ணிலமீ தெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகும்
பண்ணவர்க டம்மைமுகம் பார்த்து. (௮)

அல்லியணிக் கோதை யரவிந்தை யன்னாளை
வல்லையடி யேற்கு மணம்புணர்க்க - நல்லருணக்
குன்றனையீர் நுங்களருள் கூடினென்பா லின்னுயிர்தா
னின்றுளதா மென்று னெடுத்து. (௯)

ஆவும் புலியுமடுத் தார்த்துறை யொன்றியங்கப்
பூவலயந் தாங்கிறைவா பூவலவனே - நீவனவை
குட்டியாஞ் செய்வதெவன் சூழ்ந்ததுதா னின்னதெனக்
காட்டுவா யென்றிசைத்தார் காண். (௧௦)

மாணவிர்பொற் றேர்வேந்தன் வாய்புதைத்துக் கைம்மலரான்
மோனநிலை மேயோர் முகநோக்கிப்—பானல்விழி
மாதையடியேன் மணஞ்சூட்ட நீவிரரும்
பாதைவண நீந்திப் படர்ந்து. (௧௧)

கன்னிகையைப் பெற்றானைக் கண்டு மணமொழிந்து
பின்னரவன் பேசுதிற மெல்லாங்கேட்—டென்னிடையே
மீண்டு மெழுந்தருளல் வேண்டு மெனவினிமை
பூண்டொரையாற் சொற்றான் புகழ்ந்து. (௧௨)

சொற்றதுகேட் டைந்தவித்த தூயோர் கருணைபொங்க
மற்றடந்தோண் மன்னா மறுவனும்யா—முற்றிடவ
ரும்மணத்தைக் காண்பமெனி னேருதி வேறுண்டோ
வம்மவெமக் கீதல்லா தாங்கு. (௧௩)

என்றா ரெழுந்திருந்தா ரேந்தலரிச் சந்திரனின்
குன்றா ரகலத்தக் கோதைநிற—மொன்றாக
வென்றிகூறி யெழின்மண் டபமகன்று
சென்றார் திருநகரி னின்று. (௧௪)

மாதவர்கள் போயதற்பின் மாமன் னடபர்தணந்து
தாதவிழ்தார் வேந்தன் சயனவறைச்—சோதியனை
யுற்றநங்கன் வாளி யுடல்குளிப்பக் காமமெனச்
சொற்றகடல் வாய்வீழ்ந்தான் சோர்ந்து. (௧௫)

மாழாந்தா னுள்ளம் வருந்தினன் மெய்தளர்ந்தான்
காழார்ந்த காமக் கடுங்கனலால்—வீழாவி
சோர்ந்துசெய லற்றான் சுடர்மெழுகிற் றொக்குருகி
யோர்ந்திவைநெஞ் சோடொத்தா னுற்று. (௧௬)

பாயலக்கர் போலும் படையான் மதியதன்றன்
சேயரிக்கண் மஞ்ஞையன்னாள் சேயரொடு—மாயமா
வண்டியிவ னெம்முளம்புக் காருயிரை வெளவிக்கைக்
கொண்டகன்றா ளோவறியேங் கூர்ந்து. (௧௭)

தொட்ட கடலுலகம் யான்காவல் சூழ்தவன்று
தொட்டுக் கரவின்றித் தோய்ந்தின்றே—மட்டவிழ்தார்க்
கூழைமட மானொன்றெம் மாவிகள்ளங் கொண்டதரா
னேழைமையே மாண வெமக்கு. (௧௮)

திங்கள்வழி வந்த திறஞ்சந் திரதயன்றன்
பொங்குதவத் தற் வித்த பூங்கொடியே—யிங்கு
வடுப்பிறங்குஞ் செய்கை மனமுவந்து வான்றோய்
குடிப்பிறந்தார் செய்குவரோ கூறு. (௧௯)

வல்லியிடைச் சென்ற மனமவட்கென் வாட்டத்தைச்
சொல்லியிவண் யானுறத்தன்னிடுமோ—வல்லதிவ்வா
றீந்திடுமோ வாதையெனக் கேதலுறும் வாதையது
தாழ்ந்திடுமோ வேறிடுமோ தான். (௨௰)

என்று சதழ்ந்துகூடு மேவா சுசர்சணிமேற்
சென்றிருளோக் காலேக்குஞ் செங்கதிர்முற்—றன்றிவற்றிற்
சாவவும்வெய் தாங்காமந் தான்கடவே மாழ்கிப்பூ
யாலணிருந்தனனிப் பால். (௨௧)

மசனிகர்கோ மான்வதனை சூட்ட மணமொழிவான்
போனவருந் தாபதர்கள் பூகமலி—வானபொழி
லன்னமுறை பொய்கை யகன்றூறு கான்கடந்து
கன்னபுரி மூதூரைக் கண்டு. (உஉ)

ஏகியண்டர் போற்று மெழிற்கழற்கா விந்ததயன்
போகியின்மன் னோலக்கம் புக்கனர் + - ளோசையுடன்
மன்ன னெழுந்திருந்து மாமுடிக்க ணவ்வுரவோர்
பொன்னடிப்பூச் சூட்டிப் புரிந்து. (உங)

வாழ்த்தியவன் னோர்க்கு மணிப்பீடம் வேறளித்துப்
பூத்தவிசின் மீதமர்த்து புண்ணியரைத் - தீர்த்திகையாங்
கண்டகிப்பா னியிர் கசிவொடுநீ ராடிநந்தாண்
முண்டகப்பூச் சேர்த்தென் முடிக்கு. (உச)

போனீ ருடனே புகுந்தீர் புரிவெவன்கோ
னானே யுணர நவிற்றுமென - வூனாரும்
பற்றிரண்டு நீத்தவர்கள் பார்த்திவனைப் பார்த்தருளாற்
சொற்றவையாங் கூறுகநீ கேள். (உரு)

சென்றிங் கயோத்திநகர் சேர்ந்தவட்செங் கோலோச்சி
நின்றவரு னெஞ்சனரிச் சந்திரற்கு - றொன்றவள
னின்னெறியு நின்றனையவண்ணமும்யாம் பேசநின்பாற்
றன்னுவகை நின்றான் றுணிந்து. (உசு)

அறநெறியின் மிக்கோர்க் கருந்ததிபோற் கற்பின்
செறிவுடைய மானினியைச் சேர்த்தன் - மறநெறியன்
றூற்றுதவத் தோங்குநெறி யாதலினாற் போந்தனம்யாம்
பாற்றினஞ்சூழ் வெவிலைநின் பால். (உஎ)

காசினியெல் லாம்புரந்த கண்டனம்பல் வேந்தர்தமைப்
பாசிலழயான் பாகனல்க நீபயந்த - கேசரங்க
னன்றவிழ்தார் நங்கைக்கு நன்ப னவனலதில்
லென்றருளிச் செய்தா ரெடுத்து. (உஅ)

நகைசந் ததற வுற்றோர் நவின்றதனைக் கேளா
விசைசந்து மிசையானு யுள்ள - மசைந்தளியார்
மெய்யலங்கன் மார்பன் முதல்வன் மொழிவகைக்குச்
செய்வதென்னு மென்று நினைத்து. (௨௯)

சீத்ரானைப் பார்த்தடிகே ணின்மலனு ரோதியதோ
ரேத்தாருந் தேவ விராசியமுன் - டோர்த்தாரே
யன்னதனை யாவ ருங்கொழுநர் யானளித்த
வன்னகடை யங்கனைக்கின் றுல். (௩0)

சண்டனயோத்தியர்கோ னெய்தி னறிந்திடலா
மாண்டகையன் றனை யழைமினென்று - னீண்டுகை
விட்டபெரும் பாசத்தார் வேத்தவையி னீங்கிகர்க்
கட்டகன்று போனார் கடிது. (௩௧)

மங்கை சுயம்வரநா ளேழென்று மாநிலத்திற்
கொங்கவிழ்தார் வேந்தர்க்குக் கூறுமென - வெங்களிற்று
மன்னவர்கோன் றூதுவரை மாமுடங்க லோடுவிட்டா
னன்னவர்போய்ச் சொற்றளித்தா ரங்கு. (௩௨)

முத்திலகும் பிச்ச முடியரச ரெல்லோரு
மெத்தவகை வேட்கையொடு வின்னுதலார் - புத்திமிகு
மந்திரிக ணல்வகைய சேனை மருங்குறவே
தந்தநகர் தேயந் தணந்து. (௩௩)

முன்னாளிற் பொன்மாலை சூழ்கமரு மானழைப்பத்
தொன்னா வேழ்கடலுந் துன்றியபோன் - மின்னாற்
காவலூறு மிப்பதியிற் காண்டகைய முன்றிலங்கா
வாவியெலாம் வந்திறுத்தார் மன். (௩௪)

போன முனிவரர்கள் புக்கா ரயோத்திநகர்
கோனெழுந்தன் னேனைக் குலவணையிற் - றனிருத்தி
வாய்புனைதந்து நீயிர் வலந்தவங் கேட்டதவுக்
தாய்கிகர்த்தீர் சாற்றுமென்றான் றாழ்ந்து. (௩௫)

வார்ந்தகரத் தன்னு ளினக்கே மணமுடிக்க
நேர்ந்தவிடை மானை நிருபனுள - சேர்ந்தனலுல்
வல்லையவ ணீயும் வருகெம் முடனென்னுச்
சொல்லினர்க ளேயோர் தொகுத்து. (௩௬)

ஆங்கதுகேட் டோங்கு மகந்த குதகலத்தான்
வீங்குபுயக் கேயூரம் விண்டகல - வாங்கரும்பொற்
குன்றினுநீள் கோயில் குழைகழற்காற் கோனகன்று
முன்றின் முகத்தணைந்து நின்று. (௩௭)

பூச்சமென வேழம் பொலிபழனக் கன்னேரி
நோக்கியிவ்வூர் மன்னவர்க ளூல்வல்லோர் - நோக்கயிலார்
மண்டணிக முன்னுசெலு வாய்மலர்ந்து சூதனைந்தேர்
கொண்டணைக வென்றான் குறித்து. (௩௮)

பாகனணி மான்கொடித்தேர் பண்ணிக் கொணர்ந்திறைஞ்ச
மேகமென விம்மவிளை வார்முரசஞ் - சாகரமாத்
தண்டமுற வேலெறிந்த தோன்றணிவர் கோசலர்கோன்
கொண்டதன்மே லூர்ந்தான் குறித்து. (௩௯)

குற்றேவ லாற்றுபல கொற்றவர்த நீள்கொடிஞ்சிப்
பொற்றேரும் பொன்னைப் புரையமைச்ச - ருற்றேறுந்
தண்டிகையுங் காரிகையார் தாமிவரும் வாகனமு
மண்டியிறை பாணடந்த மண். (௪0)

கந்தியுறழ் கண்டத் தருந்ததிதன் காந்தனுமொண்
சந்திரனேர் யானமிசைத் தான்போத - விந்திரிய
மாதங்கப் பாகர்நர வாகனமேற் கொள்ளார்விண்
மீதண்டிப் போனார் விரைந்து. (௪௧)

கோட்டிமயம் போலுங் கொடிமணித்தின் டேருமந்தக்
கோட்டமலுங் கொண்டணிகர் யானையுமவ் - வீட்டமுகின்
மேய்பரவை சேர்படையும் வேலையெழு வெண்டிரைநாண்
பாய்பரியுஞ் சென்ற பரந்து. (௪௨)

இன்னவகை பேசி யெழிற்சரயு யாறிகந்து
கொன்னவில்வேற்கோமானுங் கோமதியென் - னன்னதியைச்
சார்ந்தா னவிகமொடுஞ் சாயைநலந் துய்ப்பவனுஞ்
சேர்ந்தான் குடகடலைச் சென்று. (சங)

வண்டமர்தா ரடுகிற மன்னவன்றேர் விட்டிறங்க
மண்டலிகர் மந்திரியர் வாட்கண்ணார் - கண்டநிலை
யாவருந்தம் மூர்தி யிறங்கிநடி நிரந்தே
மாவழுவை பூட்டா மரத்து. (சச)

வானுண் மணன் ஞெமிரும் வண்டலிடை மாமணியிற்
பானுண் படாத்திற் பட்டங்கமைத்து - மேனிமிரும்
பொன்முடிகள் வைத்துப் பொலிவார் பதாகைகட்டி
மின்மணிக ளிளெழினி வீழ்த்து. (சரு)

ஆதவன்செம் பார்தளஞ்சி யார்ந்ததென வேற்றியெங்குஞ்
சோதிமணித் தீபந் துலங்கவிட்டு—வேதமுறை
அக்கிக் கடனிலைத்து மாற்றி யயர்வுயிரா
வந்தித் திருந்தனர்க ளாங்கு. (சசு)

வனப்புடையன் சொல்லோ மணவாள னென்று
வனத்தளகச் சந்த்ர மதிமுந்—தினத்தவிர்கீற்
பாரகத்தைக் கீன்றெட்டிப் பார்த்தென்னத் தோன்றினன்மீ
னூரிடத்திற் றண்கதிரோ னுல். (சஎ)

பானரலை பொங்கிப் பரந்தனைய வானிலவின்
மானயன மாதரொடு காதலர்கள்—வானணையிற்
றுஞ்சினர்கள் பூங்கழற்காற் றோன்ற றனிக்கிடந்து
விஞ்சுவிர கத்துறக்கம் விட்டு. (சஅ)

கன்னி யுருவெளியிற் கண்டுவந்து நெஞ்சழிந்தந்
தன்னிரவோ டம்புலியைத் துடித்து—மன்னினனுற்
கண்டதனைக் கோழி கரைந்துரைப்பப் பொற்றேரிற்
சண்டனனைத் தான்விகம்பிற் சார்ந்து. (சகூ)

வார்முரசஞ் சக்கதிர வைகறையிற் செய்கடனைப்
பார்முறைகோ டாதளிப்போன் பண்ணிநெடுந் - தேர்மிசைக்
கொண்டெல்லோருந் தம்மையத் தேறிவரத் தானையொடு
கல்லோத யாற்றைக் கடந்து. (௫0)

சந்தவரைச் சாரலிடைச் சார்ந்தமணப் பூம்பொழில்வாய்
வந்திரதம் விட்டிழிந்தான் மற்றையருந்—தந்தமது
வாகனத்தி னின்றிழிந்தார் வாரருவி வண்சுனையி
லேகினர்நீ ராடி யினிது. (௫௧)

கந்தமலர் குற்றக் கஞல்வனமும் வார்புனமுந்
தந்தமலி நீள்குகையுந் தண்பளிங்கி—னந்தரையுஞ்
சென்றிரவி யுச்சிச் செறிபுதமை யாவும்பார்த்
தன்றிரவு வைகினர்க ளாங்கு. (௫௨)

உற்ற புலரிதனி லொண்டளத்தோ டேரிரதம்
வெற்றவயில் வேந்தன்போய் விண்ணிறுறை—யற்றுமரன்
கோட்டனே நிந்து குவிந்திருப்பக் கானலற
லோடுகங்கம் பாலையுற்றா னோர். (௫௩)

அங்கணுப ராலயத்தே யாளிமணிப் பீடிகைமேல்
வெங்கரியின் றோலுடுத்து விக்கைதமக்ன்—பொங்கலகை
பூத மிடாகினிகள் போற்றிப் பணிசெயமுக்
காதிலைவே லேந்திக் கரத்து. (௫௪)

பாங்கி லரம்பையர்கள் பைங்கவரி வீசிநிற்ப
வாங்கு நிலையுகித்த மன்னவரு—மோங்குவீணை
வாழ்ந்திருக்கும் புங்கவரும் வந்தமுன்றில் வாய்த்ததித்தே
தாழ்ந்திறைஞ்ச வீற்றிருந்தா டான். (௫௫)

அவ்வேலை யண்ண லரியனையான் றேரிழிந்து
செவ்வேலை யேந்தியகைச் சேவகரு—மைவ்வீர
மொத்தமத வாரணமு மூதையிற்செல் கோடீரமும்
வைத்துமணி வாயின் மருங்கு. (௫௬)

நீவேட மீன்றவனு நீத்தவருங் காவலருங்
கூடிவர முன்றில் குறுகிக்கலந்—தாடிடைறந்தி
வாழ்த்தித் திருமணவில் வாயிலிற்கல் லாகின்ற
மாத்திகிரி விற்கலையை மற்று. (௪௭)

பார்த்தனன்மா னந்தி பராயணனு மெய்ஞ்ஞானி
பார்த்தருளப் பான்சேசி வன்னனெனும்—பார்த்தலத்தின்
மாசற்று மன்னியபோன் மற்றவைநாம் பைங்கனகத்
தேசுற்று நின்ற திகழ்ந்து. (௪௮)

அங்கணது காணுடை வாசனிறும் பூதெய்தி
யிங்கணிவை யிங்கணுறற் கேதுவெனன்—றங்குளத்தி
லெண்ணு விருந்தா னிருண்டவடி வோடணைந்தா
னொள்ளளீர் புயத்தா னினிது. (௪௯)

செங்கை மலர்முகிழ்த்துச் சென்னிமிசை வைத்திறைமா
தங்கி மலர்ப்பதத்திற் றாழ்ந்தன்று—யிங்கணிவை
முற்சகரு வாகிப்பின் மொய்கனக மானதிற
னெற்கருணி யென்றா னினிது. (௫௦)

மற்றதனைக் கேட்டருளி மாமகிட மர்த்தனிதான்
கொற்றவனை நோக்கியது கூறுவலகேள்—வெற்றவடி
வேலிறைவ முன்புததி வேந்தனுயர் பொன்னிழைத்த
கோவிவுரி விற்றேர் குறித்து. (௫௧)

காசினிமேல் யாருங் கவராமே கல்லாகப்
பேசியொரு சாபம் பிறப்புக்குமிவை - யேசிலெவர்
பார்வையினுற் பண்டைப் பளகிலுரு வெய்துமவ
ராரிவற்றிற் காமருக ரால். (௫௨)

அன்னார்தமக்கே யளித்தருள்வா யீண்டிவற்றை
யன்றே யெனவத் தகன்றனனிங் - கந்நாடொட்
டிங்கெடுநாட் கல்லாய்க் கிடந்தருளி னேர்க்கமுன்போன்
மன்னுநிலை கொள்ளென்றான் மற்று. (௫௩)

போற்றியவை கொண்டு புரவலன்போற் றேரிவர்ந்து
கூற்றமுறழ் கண்ணார் குலவமைச்ச—ரேற்றைநிகர்
மண்டலிகர் மற்றெவரும் வையமிசைச் சூழ்வரமுன்
றண்டுசெலத் தார்கவிகை சார்ந்து. (௬௪)

விண்டா சினிகதலி மென்பழத்தின் சாறொழுகி
மண்டாசி னெற்பணைசூழ் வாவியிடை - வண்டாடு
மின்னோசை கேட்டெகின மீர்ங்கமல மீதுறங்குங்
கன்னோசி நாடணைந்து காண். (௬௫)

ஆனதிணை பல்ல வகன்றாக நல்குபுனற்
சானவியைச் சார்ந்திழிந்து தந்திமிசைத் - தானிவராத்
தோய்ந்து நதியதனிற் றுன்றுவப்பின் யாவரொடு
நீந்தியெதிர்குலையை நேர்ந்து. (௬௬)

ஆங்கணகன் றேகி யலைபுணரி நேர்கிடங்கி
னோங்கியிரு ளோட்டிரவி யொண்கதிர்த்தேர் - வாங்குதினா
மோதுசொடி வாய்ந்தவெயின் முற்றுகன்ன மாபுரியின்
சோதிமணி வாய்துணைவிற் புக்கு. (௬௭)

தோரணத்து நீழலமர் சோதிமணி வேதிகைமேற்
பூரணப்பொற் கும்பமொடு பொங்குசுட - ரேரிணங்கு
னொள்ளவிகந் தேகியப நின்றிழிந்து சந்த்ரதய
வள்ளலவை யுற்றான் மகிழ்ந்து. (௬௮)

வல்லையெழீஇக் கன்னபுரி மன்னன் மருங்கிருந்த
வெல்லவர்க ளோடு மெதிர்சென்று - சொல்லரிய
வோகையுட னண்ணலரிச் சந்திரனை யொண்கரத்தா
னாகமுறத் தான்கொண் டணைத்து. (௬௯)

பின்னருடன் போந்த பெரியர்தமைத் தண்டனிட்டு
நன்னரணை மீதிருத்தி நன்முகமன் - பன்னியணை
மற்றெவரு மேவியபின் மன்னிமரு மான்வனப்பை
யுற்,றிளமையான் டார்த்தா னுவந்து. (௭௰)

பேணிமண மாங்கணைந்த பீடுறுதோட் காவலர்கள்
யாணரம்பி னின்சொ லிடுகிடையார் - மாணமைச்சர்
தாமுமரிச் சந்திரனைச் சற்றிமையார் பார்த்துரைத்தார்
காமனிவ னென்றே கரைந்து. (எக)

நாயகனுப் பொன்னிறத்து நம்பியிவன் றன்னை யொளிர்
சாயகநாட் டத்துநங்கை தான்பெறுமே - லாயிழையை
யாம்பெறுவா ளுற்றுதவ மாதவமே யாருமெனுத்
தேம்பொதிதார்க் கோமான்சிந் தித்து. (எஉ)

சேவுயர்த்தோன் சொற்படியே செல்விதனை யாமளித்து
மேவுதிர்கீர் நாளை மினிர்வதுவைக் - காவணத்தே
யின்றுமது சார்புவயி னேகுமினென் றுங்கிசைத்தான்
குன்றுறழ்தேர் மன்னர்க் குறித்து. (எங)

அன்னதுகேட் டார மலங்குமதித் தண்கவிகை
மன்னவர்போய்த் தத்தம் வழங்கிடத்துத் - துன்னினர்மற்
றுளிகிகர் கோசலர்கோ னுங்ககன்று சென்றிபத்தின்
மாளிகையைச் சார்ந்தான் மதித்து. (எச)

நல்லா ளொருத்தி நரபதிய வைக்கணிகழ்
வெல்லரந்தா ளேக்கி யிறையுமவ - னில்லாதே
யோடியெழில் வாயிறணந் தொண்பணைத்தோ ளிந்துமதி
கூடியகீள் கோயிலடைந் தாள். (எரு)

அடைந்தாள் வதனத்தை யாயிழையாள் கண்டு
படர்ந்தாய்வல் லீண்டப் பரிசென் - மடந்தாய்சொல்
லென்றுளம் மாதிறைஞ்சி யின்னிசையாள் மாங்குயிலை
வென்றாய் விளம்புவல்கே ணீ. (எசு)

செக்கிருவே நின்னைத் திருமணஞ்செய் வான்விரும்பி
யந்தாமீ னென்ன வரசரிங்குன் - றந்தைசவை
வந்திருந்தார் மற்றவருள் வான்சரயு நாட்டதிபன்
சந்திரன்போல் வீற்றிருந்தான் சார்ந்து. (எஎ)

அன்னான் றனைஅ தரிசன் முடியுரிஞ்சும்
பொன்னார் கழல் புனைந்த பூஞ்சரணம் - டன்னாற்றி
னீண்டதிரள் சங்க நிலவுஞ் செழுமுழந்தா
ணீண்டகரிக் கைநாண் டொடை. (எஅ)

சிங்கம் விழைமராங்கு நேசகன்ற தார்மருமந்
தங்கநவக் கோளொரநாள் சூழ்ந்துவருஞ் - செங்கனக
மால்வரையை மானுமணி வாகுவுடன் யாவர்க்கு
மால்வரையா நியுமலர்க் கை. (எகூ)

வண்பனில மேய்ந்தகளம் வார்மகர குண்டலக்கா [ழ்த
தோண்கொடிறு கீண்டயர்மூக் கோமின்சொற் - றண்ணமி
மண்டாத்த வாய்கருணை வார்தடங்கண் விற்புதல்மே ர்
கொண்டபரந் தோங்கு குளம். (அ0)

பொங்களிதே னுண்டிமிரும் பொற்பதுமம் போலலர்ந்த
துங்க முகங் கண்டக்காற் சொர்க்கத்து - மங்கையர்தாம்
பின்னுமொரு கோவை யனையப் பிறக்குளத்தான்
முன்னவரோ வென்றான் முகந்து. (அக)

வார்த்தையது கேட்டலுமே மங்கை கொடி மருங்கிற்
சாத்துகலை யோடெழிற்கைச் சங்கமுந்தா - னீத்தலவா
வாலைசக் கடற்படிந்தா னாதவனு மேற்றரங்க
வோசைக் கடற்படிந்தா னற்று. (அஉ)

ஒன்றுதிறல் வாளனுறை சோணிதமூ தூரெயில்போற்
றுன்றியசெவ் வானைத் தொடர்மாலை - சென்றகல
வென்ற தலைங்கதலன் றின்னலுறீஇ வாகதிதான்
கான்ற கடுப்போற்பாய்ந் தன்று. (அங)

சார்ந்தனனுங் கப்புலியாந் தண்கவிகை மேல்வயங்க
வார்ந்தகடன் மாமுரச மன்னியம்ப - வீர்ந்தலைவாக்
சோர்கழையாம் வில்லுடன்மீன் கோட்டுகொடித்தென்றற்றேர்
மேற்கொண்டுமெய் யற்றமத வேள். (அச)

கேடன் விறற்கருப்பு விச்வளைக்கித் தேன்பருகிப்
பாடலிகா ணேற்றிப் பதுமமுத - லீடுகளை
யேவமட மானுங்க வெய்ந்தாவி சோர்ந்துகனி
பூவமளி மொற்புலம்பி வீழ்ந்து. (௮௫)

சிலம்பளிகாள் விற்பூட்டித் தேமலர்க்கோ தூவிப்
புலம்புறுவார் தம்மைப் பொருத - வலம்பெறாட
மாரகினைத் தான்வயிறு வாய்த்தற்கென் றேற்றனளோ
சிரியசின் றுய் மனத்திற் றேர்ந்து. (௮௬)

நிவினைக்கோட் பட்டார்க்குச் செய்யமண மாதரவு
பாவெனத்ற்ங் காற்றுகிற்பாள் பொலுந்தண் - கோவினனே
நின்று சிகந்த கேடமாயி றுற்றவெனக்
கின்றுங் கியற்றுதலா வீ. (௮௭)

வித்த வியன் கிளியின் வீறடக்கித் தென்மலைவாழ்
சித்தருனி மாடபெலச் செங்காந்தற் - சித்துகினைக்
கொண்டுண்ட தன்மையெனிற் கூர்விழும மீண்டெனக்குக்
கண்டின்று பொங்குலையோ காண். (௮௮)

என்றுரையா நின்று ளிருவனையர் தார் தென்மலயக்
குன்றுயரா ரக்குறட்டைத் தண்பனிநீர் - துன்றவிட்டுத்
தேய்த்து நரந்தாதி சேர்த்தவண்மேற் பூசியுக்கம்
வாய்த்தயலர்க் கைவீச மன். (௮௯)

நெய்சொரிய மூழ்ந்த நெருப்பெனவெங் காமவனல்
வெய்தெனமே லோங்குதலான் விற்றரள - நொய்தடலே
யாக விழியருவி பாய வணங்கனையாள்
சோக மொடு கிடந்தாள் சோர்ந்து. (௯௦)

அமணிருளி லாழ்ந்துசிந ஞர்சுரத்தல் லாட்பத்
தமிழ்விரகர் கைவந்து தீர்த்தாங் - கமிழ்தனையாள்
காமசுரத் தோமிருளைக் காய்வலெலரு கற்றரணி
யேமமணித் தேரணைந்தா னேய்ந்து. (௯௧)

வாவிமலைத் தேனுகர்ந்து வண்டினங்கண் மொய்த்திரைந்த
காவினெலாம் புட்கள் களித்திசைத்த - கோவிலெலாஞ்
சங்கந் தழங்கினவே தார்வேந்தர் முன்றிலின்வாய்த்
துங்கமுர சார்த்த துதைந்து. (கஉ)

சொன்ன சுயம் வரத்திற் கேற்ற நகளறநாண்
முன்னனுமே முக்கனல்வேட் போருடனே-பொன்னவிழ்தார்
குன்றுறழ்தோட் சந்த்ரநயன் றனிருந்தான் கோடித்த [க்
மன்றமெனும் பந்தர்க்கீழ் வந்து. (கங)

நால்வகைய தானை நரபதிகள் பூங்கொம்பர்
போல்வளையு நுண்மருங்குற் பூவையர்க-ளூல்வகையிற்
றேர்ந்த மதியமைச்சர் செய்யமறை யோரொவருஞ்
சேர்ந்தனர்கள் போந்து திரண்டு. (கச)

பின்னரவண் வார்மூரசம் பேர்வளையோ டார்ப்பமுகி
லன்னகுழ லார்கவரி யாங்கிரட்ட - மின்னுகொடித்
தேரணைந்து செம்மலரிச் சந்திரன்சேர்ந் தாணிறங்கி
யோருருளைத் தேரொளியோ னொத்து. (கரு)

வந்தவரெல் லோர்க்கு மதிநயனன் போடுபொன்னிற்
றந்தநவிசிட்டுத் தானிருத்தித் - தந்திடையீர் [ழலாற்
கொண்டணைதிர் கோல்வளைக்கைக் கோதையையென் றன்கு
கொண்டலைவென் கண்டார்க் குறித்து. (கசு)

சென்றந்த மாதர் திகழ்மணிப்பூ ணுன்மறைத்து
மின்றந்த நேர்நுசுப்பு வீழிவாய்ப் - பொன்றண்ணைப்
பாற்கவரி தள்ளப் பரிபுரமேங் கப்பந்தர்க்
காற்கொடுவேந் தார்கள் கடிது. (கஎ)

அன்னபொழு தாரமுத மன்னனைக் காணுதற்கு
மன்னர் மகிழ்ந்தெழுந்த வார்ப்புடனே - தன்னியத்தி
னேகத் தவன்றி யுகமுடிவிற் பொங்கியெழு
மோதமுழக் கோடிருந்த தொத்து. (கஅ)

ஆங்கிலச்சை யோடெருத்தங் கோட்டிநின்ற வர்ரமுதத்
திங்குதலைச் செவ்வாய்த் திருமகட்குப் - பாங்கியர்தா
மன்னர் மரபும் வளநாடும் பேருமெண்ணி
யின்னணமோ தற்று ரெடுத்து. (௯௯)

வியான தேவணரா வேணியனைக் காந்தழலால்
வீயாத வேளனைய மீளியிவன் - வீயாடும்
வண்டாலத் தார்கண்ணி வார்ப் பொருநை நாடளிக்கும்
வண்டாலத் தார்கண்ணி மன். (௧௦௦)

காய்ந்துகளும் வேங்கைக் கதலிதனை முன்னுயர்த்துத்
தேந்திகழார்த் தாரணிந்த செம்மலிவன் - சேந்த
குமுதமுறழ் வாய்க்கிளியிற் கூறணங்கே பொன்னிக்
குமுதமுறப் பாலிக்குங் கோ. (௧௦௧)

அக்கார மென்கிளவி யல்லிமலர்ச் செந்திருவே
நக்காரம் வேம்பினொடு நண்ணகலத் - திக்காலை
மேகநக மாடகமா வீக்குகன்னி நாடேந்துங்
கோகநக மாடகமார் கோ. (௧௦௨)

பானற் கருநயனப் பாவா யிவனுறையும்
பானற் கதிர்த்தாளப் பைங்குடையோன் - பானற்
குருத்தன் னடையளிக்குங் கோக்கமுகி னேங்குங்
குருத்தன் னடையளிக்குங் கோ. (௧௦௩)

மயிலையுறழ் வாணயன மாதரா யீண்டிவ்
வெயிலையுமிழ் வேற்கரத்து வீரன் - கயிலையென
வன்னித் திலத்தார் மகதவள நாட்டரத்தே
பன்னித் திலத்தார் பதி. (௧௦௪)

சிந்துவள கத்துகண்டு சேல்கமுகின் காயுகுர்குஞ்
சிந்தவள நாடோச்சுஞ் செங்கோல - னிந்துநுதற்
சிந்தூர மஞ்ஞூனுஞ் சேயிழையா யீங்கமருஞ்
சிந்தூர மஞ்குருஞ் சேய். (௧௦௫)

தோகைபுணை சாயற் றுகிரதரக் காரிகையே
வாகைபுனை மாரனென மன்னுமிவன் - பூமிசை
யங்கவளக் சோட்டத்தி யன்னகுயின் கட்படிக்கு
மங்கவளக் கோட்டத் தரசு. (௧௦௬)

கொய்வனசம் பங்கிபுனை கோதைமட மானேகேள்
மெய்வனசம் பத்தனிகர் மொய்ம்பனிவன் - செய்வனசத்
தேஞ்சால நாட்டார்த் திருவினத்து முத்தினும்
பாஞ்சால நாட்டார் பதி. (௧௦௭)

தேங்காவி யன்ன திருக்குடைய கோகிலமே
பாங்காவில் வேலங்கைப் பற்றுமிவன் - பூங்காவிற்
காலங்காந் தாரங் களிவண்டு பாடமயி
லாலங்காந் தாரத் தரசு. (௧௦௮)

கிட்டிசையிற் றோன்றுங் கிளரா யிரங்கான்போற்
சேட்டணையில் வீற்றிருக்குஞ் செல்வனிவன் - மாட்டினியல்
வண்கலிங்க நாட்டுக்க வான்பிடியே சொற்புலகேள்
வண்கலிங்க நாட்டுக்க மன். (௧௦௯)

காந்தாரம் பாடளிக்குக் கள்ளூட்டுங் கோதைநல்லாய்
சாந்தார மார்பனிவன் றும்வீழ்வார்த் - தீர்ந்தார்க்குக்
கூற்றும வந்திக்குக் குண்டலந்தை மீன்கமுகின்
மேற்றும வந்திக்கு வேந்து. (௧௧௦)

ஓதிமங்குல் வீழ்மயிலே யொன்னலரை வேற்படையிற்
காதிமங்கில் சேர்படைத்த காளையிவ - னோதிமங்கன்
மித்திரத்தா ரம்புயத்து வீத்தவன்று நீர்வயல்சூழ்
மத்திரத்தா ரம்புயத்து மன். * *(௧௧௧)

உட்களியின் வார்பிரச முண்டடர்ந்து மூவிருதாட்
புட்களிமிர் பூந்தார்ப் புயத்தனிவன் - புட்களிணி
மாடமரு மச்சத்தார் வான்விழியாய் வான்றவழு
மாடமரு மச்சத்தார் மன். (௧௧௨)

National Library. 7058 dt 7.7.62

பூவிலிசை மாதமரும் பொற்புடைய சங்காய்கேள்
கோவிலிசை மொய்ம்பிற் குமரனிவன் - காலிலிசைப்
பொங்கலிதங் காதலிக்கும் பூங்குயிலார் கேகயத்தே
வெங்கலிதங் காத்ளிக்கும் வேந்து. (௧௧௩)

மின்மருங்குற் காரளக விம்பவிதழ்ப் பூம்பாவாய்
கன்மருங்கு லாமணித்தோட் காளையிவன் - றன்மருங்கு
மாசலகாட் டார்மதிக்கு வானமிர்த மூற்றினனுங்
கோசலகாட் டார்மதிக்குங் கோன். (௧௧௪)

கோசலநாட் டார்மதிக்குங் கோனென்று கூறலுமே
யாசையுட னன்று னலர்முகத்தைக் - காசிழைகள்
பூட்டுதளை நீட்டிப் புரிகுழலா ளேச்சினளான்
மாட்டிணங்கி மார்புயத்தைத் தாழ்த்து. (௧௧௫)

அன்னலரிச் சந்திரனு மாவலொடு தன்னேக்கும்
பொன்னரசி வாண்முகத்தைப் பெட்புடனே - கன்றுற்று
மங்கலாண் மங்கையவள் வண்பணில நேர்மிடற்றிற் [ன்
றொங்கியிலங் கக்கண்டான் சூழ்ந்து. (௧௧௬)

என்னையிம் மேதினிக்க ணிப்புதுமை யானவகை
முன்னே மணம்பூண்ட மொய்குழலாள் - பின்னேயோ
ராடவனைச் சூட்டுங்கொ லாய்மலர்த்தா ரென்றன்னிப்
பாடவனைப் பெற்றேனைப் பார்த்து. (௧௧௭)

கன்னபுரி மன்னவனே கல்யாண மானவொரு
கன்னிதனை மீட்டுமணங் காண்குவரோ - வென்னையிவட்
கின்னவர்போற் செய்தனைநீ யென்று னயோத்தியர்தங்
கன்னவிறேட் கோமான் கவன்று. (௧௧௮)

மற்றதனைக் கேட்ட மதிதயன்றான் பேருவகை
யுற்றனனாட் டானதனை யுள்ளடக்கிக் - கொற்றவர்சான்
கோசலர்கோன் கூறியசொற் கோளாமோ மெய்யாமோ
பேசுகநீ யென்றான் பிரித்து. (௧௧௯)

அப்போ தரச ரயோத்திநகர் வேந்தனைப்பார்த்
திப்போது கண்கூடாக் காட்டெமக்கே - யொப்போது
கண்ணிகளத் தாலியெனுக் கையறைந்து மூக்கிற்சேர்த்
தண்ணனுரை பொய்யென்று ராங்கு. (கஉ0)

மற்றடந்தோட் சந்த்ரதயன் மன்னவனை நோக்கியிந்த
வெற்றவடி வேற்கரத்து வேந்தனியாம் - பெற்றகொடி
மங்கலநாண் கண்டதுநீர் மற்றதுகா ணுததவு
மங்கருமோர் மந்தணமா மன். (கஉக)

கங்கைபிறை வேணிபுனை கத்தன் வரந்தருநாண்
மங்கையொடு தோன்றிட்ட மங்கலநா - ணங்கணினுற்
கண்டவனே காரிகைக்குக் காதலனு மென்றமொழி
யுண்டதாஅன் றின்னுமிங்கொன் றுண்டு. (கஉஉ)

கேட்டிரது வேந்தர் கிளக்குவல்யான் சிற்பானுர்
நீட்டுவரத் தற்றநிலை நேருருவக் - காட்டியதிற்
காண்பதன்றி நங்கைக்குங் கைச்செய்தா யாவெவருங்
காண்கிலமா லென்றிசைத்தான் காண். (கஉங)

அந்நிலையிற் சந்த்ரமதி யண்ணலரிச் சந்திரனை
யுன்னியுளத் தெரண்மாலை வானெறிந்தா - ளன்னதுபோய்
வண்சரயு நாடன் வனைப்புயத்திற் றுன்னியதைத்
தென்கருவி யார்த்த வெழுந்து. (கஉச)

வள்ளலரிச் சந்திரனு மார்த்தாண்டன் முற்பந்தர்க்
குள்ளமர்ந்த மன்னர் குளிர்வதன - வொள்ளாம்பல்
கூம்பினவே செல்விமுகக் கோகனகந் தாதைமுகத்
தேம்பதுமம் விண்ட திகழ்ந்து. (கஉரு)

சோதிடர்கள் சூழ்ந்துரைத்த நாள்வாய் வசிட்டனைமுன்
மாதவர்கள் வாழ்த்தெடுப்பப் பல்லியத்தி - ரோதையெழ
மாமன்றன் முற்றியபின் வல்லியொடு கோசலர்வேந்
தேமஞ்ச னம்மனைக்க ணேய்ந்து. (கஉசு)

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுளவென்னும் - பண்டைமொழி
மெய்ப்பொருளைச் சோதித்தான் வீழ்ந்துபல நாட்கயற்கட்
டொப்புறழ்வாய்த் தோகைமென்றோ டோய்ந்து. (௧௨௭)

பொன்றுஞ்ச மார்பன் பொலங்கதிர்ப்பூண் மானனுதென்
மின்றுஞ்சு மாட வியனகர்க்குச் - சென்றெய்த
வுன்னியதை மாமற் குணர்த்திவிடை கொண்டவனல்
கின்னிபமுன் யௌதகமு மேற்று. (௧௨௮)

றங்கவனக் கொய்யுளைமா னூர்த்தமணிப் பொற்றேரிற்
செங்கதிர்வேற் செம்மலெனச் செம்மாந்து - செங்கமலை
யன்னா ளுடனிவர்ந்தங் கார்ப்பமுர சார்கலியின்
மின்னார் குடைநிழற்ற மேல். (௧௨௯)

அதிருடுக்கை நேர்மருங்கு லாயிழையா ரம்பொற்
கதிருமிழுங் காற்கவரி வீசச் - சதுரங்க
சேனைக் கடன்மிடைந்து செல்ல முனைந்தயங்கப்
பானற் பதாகை பறந்து. (௧௩௦)

கும்பமுனி பின்னுதித்தோன் கோலமணித் தண்டிகையி
னும்பரினி தேறியுற வொண்கயலோ - டம்பனுக்குங்
கண்மடவார் காய்களிற்றுக் காவலர்க ளூரவமைச்ச
ரண்மிவர வையத் தணைந்து. (௧௩௧)

வார்பயிலு நீள்கிடங்கு வாய்த்தொளிருங் கன்னபுரிக்
கார்பயிலுங் காப்பின் கடையிகந்தங் - கேர்பயிலுஞ்
செஞ்சாலி வெண்வேலிச் சேவலெல்லின் பேடுதழீஇத்
தஞ்சுமலர்ப் பண்ணையுற்றான் சூழ்ந்து. (௧௩௨)

ஆதபத்தால் வெம்மை புறந்தே யடையினுமுட்
டேதமறு நன்னீர்ச் செழுந்தடங்கள் - மாதவர்க
ணெஞ்சை நிகர்ப்பனநீ ணேரிழையாய் காணென்றான்
மஞ்ச நிகர்த்தகர மன். (௧௩௩)

இமிழுதமன்ன வான்வளிதி யின்னுயிராய்ப் பற்றின்
றமல னமர்வதுபோ லாவிக் - கமலதள
மீது நறுஞ்சலில மேவித் திகழ்வதுகாண்
காதயில்வேற் கண்ணாய் கடிது. (௧௩௪)

கற்றாரைக் கற்றாரே காமுற்று நற்கழகத்
துற்றாங்கு வெண்டேவி யோதியங்க - ணற்றா
மரைக்கயத்திற் சேர்ந்துறைவ வாள்விழியிற் காண்டி
விரைக்கதுப்பி னங்காய் விரைந்து. (௧௩௫)

உற்றக்கா லொற்க முவர்த்தகலா தொட்டியுறும்
பெற்றியர்போற் கொட்டியொடு பேராம்பல் - வற்றியகீள்
பண்ணைக்கட் டென்றுவரீ பாராய்செங் காந்தளங்கை
விண்ணைப் பொருவிடையாய் வீழ்ந்து. (௧௩௬)

சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
யார்தனையுங் காக்கு மறிவினர்போற் - காய்ந்தெறியும்
பன்னர்க் கிருநிழலைப் பாலிக்கும் பாதவத்தைத்
தென்னமுதச் சொல்லணங்கே நேர். (௧௩௭)

நல்லார் பலரிடத்து நண்ணிநிலை பார்த்திருந்து
கல்லாக் களிக்குமகன் போன்மலர்க - ளெல்லாம்போய்த்
தேனுண் டளிகள் செருக்குவரீ காரிகைமை
தானுண் டொளிர்தடங்கண் சாந்த. (௧௩௮)

இன்னாசெய் தார்க்கு மினியசெயுஞ் சான்றோரிற்
றின்னார்க்குந் தாற்சந் சிறார்வீச—வன்னார்க்கும்
பொங்கர் கனிசொரியும் பொற்பதனைப் பார்த்தருளாய்
திங்கணுதற் செந்திருவே நீ. (௧௩௯)

கேளாதே வந்து கிளைகளா யிற்றொன்றி
வாளாதே போமாக்கண் மாணமா—னீள்காக்கைக்
கூட்டிற் குடம்பையுறக் கோகிலங்கள் சேணகல்வ
பாட்டளிகுழ் பூங்குழலாய் பார். (௧௪௦)

ஒப்புரவு தன்னைநயந் தாங்கியேற்று நல்லவர்பாற்
றுப்புறநற் செல்வந் துவன்றியபோ—லப்படிவிற்
சிதநறுந் நீர்த்தஞ் செறிக்கிருத்தல் வன்னையுறழ்
சாதளவு நீள்விழியாய் காண். (கசக)

ஒத்தவர னுள்ளா ருறுந்துணையுங் காத்திருக்கும்
வித்தகரி னேரிமடை மேற்குரண்டக்—தத்திசிறு
மீனைக விட்டுறுமீன் மேவளவுஞ் சோர்ந்தமர்வ
மானேகண் சாத்தாய் மகிழ்ந்து. (கசஉ)

பெற்றார்க்கொன் றீகலான் போறஞ்செய் யாளுடம்பைச்
செற்றிட்டி வைத்திழக்குஞ் செல்வனைப்போ—னற்றுழை
மேன்மாடு மெய்க்கியிறல் கொள்ளவரி விம்முவபார்
பான்மாறுஞ் சொல்லாய் பரிந்து. (கசங)

கொல்லையுழு வோர்படைக்குற் குற்றியினைச் சார்தருபுல்
லொல்குதலின் றுற்றிருப்ப வல்லவனா—யல்லவர்சேர்ந்
தொன்னலரை யுட்கா துறுவதுபோ லாமதுகாண்
மின்னுருவ மாதே விழைந்து. (கசச)

நுண்ணறிவு மாந்தர்க்கு நல்கற்ற வத்துணையே
நன்றுவது போற்காமர் காத்துறைப்ப—மண்ணகழ்ந்த
கேணபெலா மூறுவைப்பன் பிள்ளைவிழை நீங்குதலை
வாணுதலே நோக்காய் மகிழ்ந்து. (கசரு)

தன்கதிரி னும்புரக்குஞ் சந்திரனின் முன்னுருத்து
வெகண்டிரை வீழ்வதனத் தம்பிகையி—னன்செழுந்த
மங்கையிடத் தாரின் வயனிலவுஞ் சொற்பறம்பைக்
கொங்கையுறு கோதாய் குறி. (கசசு)

பாங்கித் பழனவளம் பைந்தொடிக்குக் காட்டிமிளிர்
ஞாங்கரமர் செங்கை நரபதிதா—னுங்ககன்று
போகி யருஞ்சுரத்தைப் புல்லியவ னூரணியைச்
சோகமற வேர்த்திந் தொழுது. (கசஎ)

ஏகியவ னின்று மிரும்பவத்தை யோப்பிமேன்
தாகினியைச் சேனையொடு சார்ந்தனிற்—றூசையுட்
றுணமொடு மூழ்கியரி யானைபுலி யார்வனம்வெற்
பேர்ண மிவை யாவுமிகந் தற்று. (௧௪௮)

தற்கியற்று நன்றிதனைத் தானறிந்து முல்லைநறும்
பற்கிளரப் பற்பகலில் பொங்கவரிப்—பொற்கதிரை
வானிற்கு நீட்டுமெழிற் கோசலமென் மாதுமுக
மான வயோத்தி யணைந்து. (௧௪௯)

வானுரிஞ்சு நொச்சி மணிவாயி லின்புறத்தே
நானிறத்து வேதியர்க ளுலமைச்சர்—தானைவெள்ள
மூதறிஞர் மொய்த்தெதிர்ந்து மாமுகிலி னார்க்குமுர
சோதையுடன் கொள்ளப் புகுந்து. (௧௫௦)

தோரணத்து வீதிவயிற் றூண்டையுறழ் வாய்த்தோகை
மாரரக்கு நீர்சூழ்த்தி மண்கவிழ்ப்ப—வோரிகந்த
பூசுரர்பொற் கும்பமெதி ரேந்திவரப் பொற்கோயி
லாசறுநாட் புக்கா னமர்ந்து. (௧௫௧)

அன்றினர்கண் மார்பமகழ்ந் தாவி குடித்தொளிரும்
வென்றிவடி வேற்கையரிச் சந்திரனுங்—கன்றணிகைப்
பூவையுமோ வாகினிது புல்லியமர் போழ்துற்ற
பாவைவயிற் கர்ப்பம் படர்ந்து. (௧௫௨)

வேலனைய கண்குழிய மெய்ந்நரம்பு பைத்தொளிரப்
போலனைய மென்றோட் பொலிவகல—வாலசடு
வீங்கவிடை தோன்ற விளர்ப்பமுக கங்கைநகிற்
கோங்கின் முகங்கறுத்த கூர்ந்து. (௧௫௩)

பன்னுமதி பத்தும் படர்ந்ததற்பின் சந்த்ரமதி
நன்னாரமர் நாளொடுகோ ளில்யோக—மின்னமைவநன்
குற்றதினத் தீன்றா ளுலகுவப்ப வோர்மகனைப்
பொற்றரளஞ் சங்குயிர்ப்ப போல். (௧௫௪)

பெற்றான் மட்டவரலான் பிள்ளையெனுச் செடியர்வல்
லொற்றார் கழற்பதந்தாழ்ந் தோதுதலும்—வற்றாத
வோகை நெடும்புணரி யுட்டிளைத்தோன் னூர்க்கடந்த
வாகையரிச் சந்திரனு மன். (௧௫௫)

சத்தியனா னனந்தன் சார்தனியிற் றான்சிறப்பு
மெத்தியவன் பாணிகழ்ந்தி வேதியருஞ்—சத்தமுதற்
றந்திரத்திற் றேர்ந்தவருந் தாம்வெறுப்ப வொண்ணிதியந்
தந்திபரி பூண்டெழுந் தந்து. (௧௫௬)

வெய்யசிறைச் சாலைநின் றும் வேந்தனைக்கால் யாப்பகற்றிக்
கையசல மாநெடுந்தேர் காணிகொடுத்—துய்கவெனப்
போக்கிக் கறைவிடுத்துப் பொக்கசத்தின் றாட்டிறந்தே
யாக்கமிலார் கொள்கெனவிட் டார்ந்து. (௧௫௭)

சுண்ணமொடு தூநெய் விழாவெடுப்ப நல்கிநகர்க்
கண்ணமர்வோ ரெல்லாங் களிதூங்க—வண்ணமறை
சாற்றுமர பாற்செய்க்குச் சாதகமா நிச்சடங்கை
யாற்றி யகத்தா னமர்ந்து. (௧௫௮)

விந்தமலை வீறடக்கு மெய்த்தவன்பின் னுற்பவித்த
வந்தணன்முன் னோராசி யாங்குரைத்து—மைந்தனுக்குப்
பேர்தேவ தாசனெனப் பேசமகிழ்ந் தேமகளைத்
தார்மார் பெடுத்தணைத்துத் தான். (௧௫௯)

எண்ணரிய வின்பமடைந் தேந்திழையாள் கைக்கொடுத்துத்
தண்ணிலவு வீசுமணித் தாமம்பொன்—னண்ணாஞாண்
சுட்டி சதங்கை சுதற்கணிந்து மின்மணிப்பொற்
றொட்டிலின்க ணேற்றிகண்ணுட் சூழ்ந்து. (௧௬௦)

மின்னுமதி யோர்நான்கிற் சந்தி மிதிப்பித்தங்
கன்னமதி யாறி லமர்ந்தூட்டித்—தன்னொருசெய்க்
காண்டதனிற் கேசவினை யாற்றி மகன்றவழ்ந்தே
யீண்டுசிறு கைகொட்டி யீர்த்து. (௧௬௧)

அளாவியகூ டாரமிழ்ந் தாயிழையோ டார்ந்து
குலாவிவிளை யாடமக்கூ டார்ந்தே—யெழாலெனப்பே
சின்குதலை கேட்டின்ப மெய்திப் பயில்வித்து
நன்கலைக ளையாண்டி னன்கு. (கசுஉ)

ஆறும் பருவத் தருமகற்கு முப்புரிநூல்
வீறு ரணவிதியின் மேவியிட்டு—மாறு
மகிழ்வுற்றான் சேயேழ் வயதணைந்தா னங்கா
ணிகழ்வுற்ற சொல்வா ரந்து. (கசுங)

விவாககாண்டம் முற்றிற்று. ஆ. கஅசு.

---

## இந்திரகாண்டம்.

---

அற்பகறுஞ் சாரா தவிர்கனக லோகத்தே
பொற்பினம ராவதிப்பேர்ப் பூம்பதியிற்—சிற்பநன்னூல்
வல்லமய னோர்ந்து வகுத்த சுதன்மையெனு
மல்லலணி மண்டபத்தின் வாய். (க)

மின்னுமணி மேகலையார் மேவியிரு பாங்கரினு
மன்னுமெழிற் சாந்தாற்றி வார்கவரி—பொன்னலர்க்கைக்
கொண்டசைப்ப வெள்ளைக் குருஉநித் திலக்குடைமேன்
மண்டு நிழல்செய்ய மற்று. (உ)

சூதரொடு மாகதர்கள் சூழ்ந்து விருதுகளை
யோதநிதி யைந்தருவி னோடுமணி—யோதனமீ
தேனுவிவை கட்கடையத் தேர்ந்தியற்றக் கின்னரர்யா
ழாறுவமிழ் தார்த்தச் செவிக்கு. (ங)

உருப்பசிமுன் னல்லா ரொளிர்மின் கொடிபோ
னிருத்தமெதிர் செய்ய நெறியா—ருருத்திரர்கள்
சாத்தியர்விண் ணோர்கள் தருவர்வசுக் கள்சித்தர்
நீத்தவரெல் லாம்பரவ நேர்ந்து. (ச)

கோவைமருள் வாய்மெங்கெகாக் கடந்தற் சசிமருங்கு
மேவமணி மௌலிசிர மீதிலங்கச்—சேரவினிலை
கொய்தபடை கையிற் குலவுநறுங் கற்பகத்தின்
மொய்துணர்த்தார் ஞான்றசைய மொய்ம்பு. (ரு)

சிற்றக் கடாக்களிற்றைச் சென்னிபிளக் தாண்ணுமரி
யேற்றி னெருத்தமுறு மாதனத்தே—வீற்றிருக்கு
மாயிரகீர் கண்பூத்த வாகத்தா னேர்ஞான்று
டாய வவைக்களத்தார்ப் பார்த்து. (சு)

பூவுலகி லின்சொற் பொறைவாய்மை வெஃகாமை
யீவனிசெங் கோன்மை யிழுக்கினடை—தீவினையை
நாணலறி வாண்மைபுகழ் நற்கல்வி வீரமுளா
ரேணமர்தோள் வேந்தர்க்குள் யார். (எ)

என்று வினவினனுங் கேளையர்வா ளாவிருப்பத்
தன்று தவவசிட்டன் சொற்றவெலா—நன்றுடையன்
றன்னே ரிலாதவரிச் சந்திரப்பேர் மன்னவர் கோ
னென்னு விருத்தா னினிது. (அ)

அன்னதவன் கூறலுமே யன்றமனக் கௌசிகன்றான்
கொன்னும் வசிட்டாவிக் கோபதிமுன்—னெங்கலமும்
புல்லானைப் பொய்யுரைக்கும் பூரியனைப் பாதகனை
நல்லா னெனநவின்ற தென். (கூ)

என்றான் மறைவசிட்ட னினமுறு செய்கைகுணந்
தன்றுத தாயோனைச் சாலவிகழ்ந்—தின்றுமெங்
கோசிகவாய் வெந்திலையே கோள்புகனீ வெந்திலையே
யேசிறெய்வம் பொய்த்ததன்பா லென்று. (க0)

செப்பியவம் மாற்றஞ் செவிசுடலுங் கௌசிகன்றான்
றப்பியம்புன் வாயே தவப்புழுக்கு—மெய்பொழுது
மெய்கழறென் வாய்மனமும் வேவலகா னென்றறைந்தான்
வெய்தழல்போற் சேந்து விழி. (கக)

குணமென்னுங் குன்றேறி நின்ற வசிட்டன்
கணமல்கு காட்டி னடிக்கு—மணவி தழிச்
செஞ்சடையன் போற்கண் டிசைகடொறுந் தீத்தெறிப்ப
வெஞ்சினமுட் கொண்டெழுந்தான் வேர்த்து. (௧௨)

தாங்கலனாய்க் கௌசிகனுந் தன்னுளத்திற் சீற்றமுறாத்
தோங்கவிழிக் கங்க முகுத்திட்டா—னாங்கவிரு
பாவினாறு செங்கனலி பம்பிச் சுவாலித்து
மேலெழுந்து போய விறந்து. (௧௩)

பொங்குதழல் போகிப் புனிதமறைப் புங்கவன்றான்
றங்கு முலகதனைத் தாக்கலுமே—மங்குலிவர்
வென்றிக் குலிசத்தன் விண்ணாடுமண் ணென்படுமோ
வென்று நடுங்கி யெழுந்து. (௧௪)

அன்னமுனி வோர்சினத்தை யாற்றிநனி தேற்றியுள
மென்னைசெயத் தக்க திழிதக்க—தன்னியுமா
யாடுமின்வென் றூற்றேற்றா லந்தணிர்நீ ரென்றவனை
நாடி யிசைத்தா னயந்து. (௧௫)

சான்ற பராசரன்சூழ தாதையரிச் சந்திரன்றான்
மான்று மனம்பணைப்பின் மற்றிவனா—லென்றதவம்
விட்டுமண்டை யோடேந்தி மேவுவன்யான் றெற்கினெனாக்
கட்டுரைத்தா னெஞ்சங் கனன்று. (௧௬)

இன்னிசையாழ் மீட்டு மெழினா ரதமுனிவ
னங்கிலையிற் காதி யளித்தமகன்—றன்னைமுகம்
பார்த்து வசிட்டன் பகர்சபதங் கேட்டனைரு
ணோர்த்துளகி யோதென்றா னுற்று. (௧௭)

சத்திமுத லோர்ப் பயந்தோன் றானாறவன் வென்றியெனின்
மெய்த்தவத்திற் பாதி விழைந்தளிப்பன்—கத்தலனால்
யானு மவன் போற் பெரும்பாடை யென்றிசைத்தான்
வானிறைமுன் கௌசிகனு மற்று. (௧௮)

சாலுமிஃ தேந்தலரிச் சந்திரன்பாற் சாற்றுமே
யேலவிவ னுற்றவெலா மேகியினி—நாலுசடைக்
கோசிகரீ யன்றேன் குணஞ்செயலைச் சோதியெனப்
பேசினனாற் பேர்யாழ் முனி. (௧௯)

ஆங்கச் சபைகுலைய வைர்தவித்த வந்தணர்க
ளீங்கித் தமதிருக்கை சேர்ந்தனர்மேற்—றீங்கிழைப்ப
வுன்மனத்தான் கௌசிகனு முற்றான் முனமமர்ந்த
பொன்மலைசீர் சாரற் பொழில். (௨௦)

இந்திரகாண்டம் முற்றிற்று. ஆ. ௨௦௯.

---

## வஞ்சனைக்காண்டம்.

பொன்மலைசீர் சாரற் பொழில்புகுந்த கௌசிகன்யாம்
பொன்மலிநா டாளும் புருகூதன்—முன்மனமோங்
கவ்வியத்தாற் பேசுற்ற வம்மொழிமெய் யாக்கிடுமா
றெவ்வகையென் றோர்ந்தா னிருந்து. (௧)

இருந்தவிடத் தந்த விருடிதனைக் காண்பா
னருந்தவரெண் ணில்லா ரணைந்து—பொருந்துமன்பிற்
சென்னி யவனடியைத் திண்டமணில் வீழ்த்தெழுந்து
மன்னி மருங்கு மகிழ்ந்து. (௨)

முக்குறும்பை வென்ற முதல்வாசீ விண்ணுலகம்
புக்கபின்றை யாங்குப் புகுந்தவெலாந்—தொக்கவெமக்
கொன்றுமன்பி னொன்றும் விடாமே யுரைத்தருளா
யென்றவனை வேண்டினான் றே. (௩)

சுத்தநெறி தேர்விச் சுவாமித் திரமுனிவன்
வித்தகசு ருற்றதொன்றும் விள்ளாதே—மெய்த்தவத்தீர்
தேவரவைக் கட்பெரியோர் சேர்ந்தமகத் தோரருவேள்
வாவலினின் டாற்றவடைக் தேன். (௪)

நீயிரெலா நெஞ்சுவந்து நேரிலரிச் சந்திரன்பாற்
போயரிய வேள்விக் கியான்புகல்வ—தாயபொரு
ளல்கும் வகைபொருந்தி நன்ஞறுதிரா லீண்டென்னுச்
சொல்லினனேர் வஞ்சனையுட் சூழ்ந்து. (௫)

சேர்ந்ததற்குப் பற்றிரண்டு நீத்தவர்க ளெல்லோரும்
வார்ந்தவரைச் சைலம் வனநதியைச்—சார்ந்தகன்று
பொன்னனையார் பந்தாடும் பூம்பொழில்சூழ் கோசலமா
மன்னவையிற் புக்கார்கள் வந்து. (௬)

வந்த்முனி வோரை வணங்கித் தவிசிருத்தித்
தந்தமத யானையரிச் சந்திரன்றன்—பந்தமக
லந்தணர்கா ளீண்ட னடைந்ததிறஞ் செப்புமெனுச்
சிந்தைமகிழ்ந் தோதினன்முன் சென்று. (௭)

கற்பகமு நாண்மலர்க்கைக் காவலகேள் வாசகமொன்
றற்பிறெடு கௌசிகனஃ தாடினனற்—பொற்புறுநீ
யீய வதுதணிந்தா லின்னதெனச் சொல்லமென
வாய்மலர்ந்தார் மாதவர்கள் மற்று. (௮)

ஆருயிரோ யர்ஞ மனிச்குலவ்யா னெஞ்சுவந்து
பேரறிவாஞ் செல்வம் பெரிதுடையீர்—நீரியம்பு
மப்பொருளுண் டாமெனினல் சாதொழிவ னேவென்றுன்
றப்புணரயாத் தாரிறைவன் றான். (௯)

வானவர்க்கு மன்னவர்க்கும் வாயாத வோர்வேள்வி
தானியற்ற வெண்ணினம்யாஞ் சாற்றுமதற்—கானபொருள்
வேண்டியுனை மேவினமால் விண்ணுறழ்கை வேந்தவென்றார்
மாண்டதவத் தோர்வாய் மலர்ந்து. (௧௦)

போதப் பெரிதே புகலும் பொருளெனிறு
மீத வெனக்கிபல்பா மென்றிசைந்துக்—காதயில்வேற்
றுனையரிச் சந்திரன்றன் னேவலர்க்குச் சாற்றியிட்டா
னினமில்பொன் கொண்டணைதி ரென்று. (௧௧)

இன்றிவ் விருந்தியம் வேண்டலம்யாம் யாகமியற்
றன்றளிக்க வென்றறைந்தா ரந்தணர்க—ளன்றெனவே
மன்னனிசைந் தானவனை வாழ்த்தித் தபோதனர்க
ளாற்கலைத் தான்விட் டகன்று, (கஉ)

வல்விரைந்து பஃறிணையும் வார்கடமு நீந்திவினை
வெல்விசுவா மித்திரன்றன் மேவுடசம்—புல்லியவற்
போற்றியரிச் சந்திரன் பொன் னல்கவிசைந் தானெனவே
சாற்றினர்சென் றார்தமது சார்வு. (கங)

நியமனக் கௌசிகன்றன் றிங்கள்சில சென்றதற்பின்
கூயகலப் புட்களர்க் கட்குளமீன்—பாயநெடுங்
காவலர்கண் ணீருறைப்பச் செந்நெற் கதிர்பனிப்பத்
தாவிலயோத் திப்பதியைச் சார்ந்து. (கச)

மந்தரவெற் பன்னகொலு மண்டபத்தி லெய்தவரிச்
சந்திரன்சென் றம்முனியைத் தாளிறைஞ்சி—யந்தமணி
யாதனத்தின் மீதிருத்தி யையயாநீ வந்ததிப
மோதுகென்று ளுள்ள முவந்து. (கரு)

சந்திமுத னூற்றுவரைத் தான்செருத்த வெய்யமுனி
மெய்த்தமறை வேள்விக் கியான்விடுத்த—வத்தவர்க்கு
நீயிசைந்த வொண்பொருளை நீயிற்பூ வாளுகிற்போ
யீயெனச்சிக் கென்றியம்பி னான். (கசு)

ஈகுவல்யா னின்னினியே யெத்துணைப்பொன் வேண்டுமது
போகு நெடுஞ்சடிலப் புண்ணியனே—யோகையினி
வாய்மலரா யென்றிறைஞ்சி வாழ்த்தினன்வண் டேகருப்
பாய்மலர்த்தார் வேந்தர் பதி. (கஎ)

யானைமிசை நின்றே யெறியுங் கவண்சிலைதான்
போன வளவு பொருள்குவிப்பி—னீணமறு
மாமகத்தை யாற்றிடலா மன்னவனே காணென்றான்
றீமனத்துக் காதிமகன் றேர்ந்து. (கஅ)

அவ்வகையே நல்குவன்யா னையா வெனமொழிந்து
தெவ்வர்முடி தேய்த்துத் திகழ் கழலா—னிவ்வுழிநீர்
வாரணத்தைத் தம்மினென வாதுவர்க ளோடிப்போ
யோரிமைக்குட் கொண்டணைந்தா ருங்கு. (க௯)

கண்டா னிபங்களித்தான் கௌசிகன்பின் பண்ணலைப்பார்
தண்டா ரரியிசைந்த தேயமையு—மண்டோமஞ்
செய்ஞ்ஞான்றீ நின்பாலென் செம்பொ னடைக்கலமா
விஞ்ஞான்று வைத்தனன்கா ணென்று. (உ0)

செப்பித் தனுதிருக்கை சென்றோர் வியன்றருவின்
கப்புநிழற் கண்ணமர்ந்து கண்ணினனு—விப்புவிமே
லூர்வனபுள் வெவ்விலங்கு முன்னெவையு மொல்லையிவட்
சார்கவெனத் தன்னுளத்திற் றான். (உக)

அக்கணத்தி லாகு வணிலகிமுன் னூர்வனவுங்
குக்கில் கொடிகிளிபூழ் மஞ்ஞைமுதற்—பச்சிகளு
மத்திபுலி யெண்கரியெய் யாமாமான் முன்விலங்கு
மொய்த்திருடி முன்னணைந்து தாழ்ந்து. (உஉ)

எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகு மெந்தாய்நீ
தவ்வுமிரை காணிற் றரீஇப்பசியாம்—வெவ்வடவை
நீரப் புசித்துத் திரியுமெமை யின்றீண்டுச்
சேரப் புரிந்தமையென் செப்பு. (உ௩)

என்றலுமக் கௌசிகனீ ரேந்தலரிச் சந்திரனுட்
டொன்றுமுயி ரோடுபெயி ரோங்குபொழில்—சென்றினியே
வேரினுட னேகளைந்து வெய்தெனவீங் கெல்லீரும்
வாருமென வேவினன் மற்று. (உச)

ஆங்கவவை தா மருந்தவனைத் தாள்வணங்கி
நீங்கிவினைக் கிந்திரனூர் நீளூர்தி—தூங்குமலர்ப்
பொங்கரொடு பொற்கதிர்நீள் பூம்பணைசூழ் கோசலநா
டெங்குமடர்ந் தற்றழித்த வே. (உ௫)

அந்தவன நாட்டி லமர்ந்துறைவோ ரெல்லாருந்
தந்திமுதற் கான்விலங்கு சார்ந்தியற்றும்—வெந்தொழிலைக்
கண்டுமனமழுங்கிக் காவலயோத் திப்பதிபுக்
கண்டியரிச் சந்திரன்முன் பார்த்து. (௨௬)

தண்டனிட்டு நின்றெம்மைத் தாயிற் புரந்தளிப்போய்
மண்டுமிடித் தீயவிக்கு மாமுகிலே—யண்டலர்கள்
கோளரியே நம்முடைய கோட்டத்தே மாவினத்தின்
நாளனைத்த வோதுகங்கே ளென்று. (௨௭)

சிற்றுறவி யாருவனில் செற்பதங்கம் பூழ்துரிஞ்சி
னற்றுவர்வாய்க் கிள்ளைமயி னவ்விமரா—மற்றெறுழி
தாழ்பனைக்கை யானைகவி தாசோகஞ் சோலையொடு
பாழ்படுத்த பைங்கூழ் படர்ந்து. (௨௮)

காவலிருந் தோரையெலாங் கங்குலிடைத் தேள்செய்யான்
நீவிடரா கந்தீண்டிக் கொன்றனவாற்—றுருவுபுலி
யாளிபல்லவ் கோணுய்க ளாளிரையோ டோட்டுநரை
மூளையுண்ட வந்தபற்றி மொய்ந்து. (௨௯)

இந்நிலைக்க ணெம்மையெலா மீசாநீ காத்திலையேற்
கொன்றுணவே யாவேங் கொடுவிலங்கிற்—சென்னலுங்கேட்
டஞ்சேன்மி னென்றியம்பி யத்தன்வினை யாட்டையுற
நெஞ்சுருடு கோமா னினைந்து. (௩௦)

இல்லுமக்கீ ராண்டுக் கிறையென் றவர்தமக்கு
நல்லதுகில் செம்பொனணி நல்கிநம்மூர்ச்—செல்லுமென்று
ளன்னகுடி மக்க ளனைவருந்தம் மூரணைந்தார்
மன்னன் மலர்த்தாள் பணிந்து. (௩௧)

வஞ்சனைக்காண்டம் முற்றிற்று. ஆ. ௨௩௭.

## வேட்டஞ்செய் காண்டம்.

நாட்டவர்கள் போயபின்றை நள்ளலருன் பாற்றினத்திற்
கூட்டுமயில் வேலிறைவ னூர்க்கணின்று—காட்டேவிலங்
கிண்டிப் புரிகொடுமைக் கென்செயலாங் கூறுமென்றான்
மாண்ட மதியமைச்சர்ப் பார்த்து. (௧)

ஆண்டளப்பா னன்ன வமாத்தியர்கை கூப்பினர்கின்
றூண்டகைநீ யத்தமற வேடுவர்நா—யீண்டுகணைத்
தோடணைந்து வல்லே யுயிர்செகுத்தே மாவினத்தை
நாடளிக்க வென்றார் நயந்து. (௨)

அந்தமொழி கேளா வதிர்கழற்கான் மன்னவர்கோன்
வெந்தறுகண் வில்வேடர் தம்மையெலாந்—தந்திடுமி
னிக்கிமைக்கு முன்னீவி ரேகியெனு விண்டனனுற்
பாங்கினின்ற தூதவரைப் பார்த்து. (௩)

தூதர் தொழுது சுடர்ப்பகையி னோடிப்போய்க்
காதமுவை தோலரிவாழ் கானகரு—யாதநரீஇக்
குன்றவரைக் கண்டரையன் கூறியிட்ட கற்பனையை
மன்றவவர்க்கிசைத்தார் மன். (௪)

அக்காலைச் செவ்வே ளமர்நிலத்தெப் பாலினின்று
மைக்கார் வடிவந்தர் வார்ந்திடுதக்—தக்காதர்
பீலிநிகழ் சூட்டினர்கள் பேரழல்கால் கண்ணர்கனி
மாலை துயல்வருமார் பர். (௫)

முழவுறழ்தோ ளேர்தருமே மூரிச் சிலையா
ரழல்விடம்பில் கம்பிமொ வத்தர்—செழுவி லுடை
வாளர் மருங்கசைசெங் கச்சர்தொடு தோலணிந்த
தாளர் கணக்கிறந்தார் தாம். (௬)

போர்நின் சருக்கெயிற்றுப் போகு ஞுகச்சுருள்வாற்
பாய்ந்துகுரைத் தேகடிக்கும் பாசியின—மோர்ந்தவராத்
தொண்டகத்தின் கூட்டந் துவைப்பக் கருங்கடல்போற்
றண்டனிட்டு வேந்தனெதிர் சார்ந்து. (௭)

நின்றொழுந்தை யாவெம்மை நீயழைத்த காரணமோ
தென்று மறவனுமண் ணில்விழுந்தா—ரன்றவர்கள்
வந்திரஞ்சேர் மூவுலகும் வைத்த பிருதுமகன்
புத்திரன்று ணுக்கிப் புரிந்து. (௮)

வாவன் முதற்சகமும் வாலெலிமுன் னூர்வனவும்
வாவுமரி யாதிவன மாக்களுந்தாங்—காவினொடு
பைங்கூழை காடணைந்து பாழ்படுத்த லானவற்றை
யிங்கேகி முன்னிருமி னின்று. (௯)

யாமு நமக்குதவி யாக வருதமென
மாமணிப்பூ ணுடை வழங்கினனி—யாமவர்க்கு
நல்கிவிடை பின்னமைச்சர் நாடியனீ கத்தொடேர்
செல்கவினைத் தென்றியம்பித் தேர்ந்து. (௧௦)

மண்டபத்தி னீங்கி மணிபுருந்து மெய்ச்கவசங்
கொண்டுடுத்துச் சாமநிறக் கூறைமணி - மண்டுமுடி
சூடியுடை வாள்வீக்கிச் சூலிதரு வில்லேந்தி
யீட்டுமம் பாவமுது கிட்டு. (௧௧)

பைங்கழைத்தோள் வெண்டரளப் பற்கருங்கட் செந்நவர்
பொங்குசுடர்ப் பொன்வடிவப் பூவையொடு-சங்கலறக் [வாய்ப்
கொய்யுளைமான் யாத்த குவடனைய பொற்கொடிநீள்
வையமிசை வல்லை யிவர்ந்து. (௧௨)

காற்படைமுன் னண்ணவெழு பூழ்தி பதாகைநிரை
காற்பெறமுர் கத்துடனே வெண்கவிகை - மேற்பகலை
மூடி யிருடோற்ற மொய்யரச ராரமுடி
நீடுமணி காட்ட நிலா. (௧௩)

மஞ்சுறங்கு நீண்மாட மாலை நிகழ்மறுகி
னெஞ்சுளைய வூர்ந்து நெடுநகரத் - திஞ்சிமணி
வாயில் கடந்து மறவர்படைக் கார்க்கடலைப்
போயணைந்தான் பானுவைப் போல். (௧௪)

வேந்தர் பிரானையடி வீழ்ந்திறைஞ்சி வெங்கோலனார்
போந்து பரந்தகணி பூம்பொழிலின் - ரார்ந்ததட
மெங்கும் வலைபிணித்து வாரொழுக்கி யெங்கும்பம்பை
தூங்க விரலை தடி. (௧௫)

முழக்கிப் பிணிப்பகற்றி மொய்ஞ்ஞமலி வேலி
யுழைக்குலமா மார்கடமை யோரி - புழைக்கையிபஞ்
சேழறரக் கென்றுகவி கேசரிமுன் வெவ்விலங்கு
சூழ்வலைக்குள் ளேவத் துரந்து. (௧௬)

எய்தெறிந்து குத்திச் செருத்தனராங் கெண்ணிறந்த
மொய்சிறைய புள்ளு முரண் விலங்கும் - பெய்கழற்கால்
வேந்தர் கவண்சிலையும் வெள்வேலுங் கொண்டிருந்தார்
வீழ்ந்தபிணை வெற்பெழுந்த வின். (௧௭)

செயிரிற் றலைப்பிரியாக் காட்சிச் சிலவ
ருயிரிற் றலைப்பிரிந்த வூனை - வயிற்றெழுந்த
வங்கி தணிய வுறற்பொசுக்கி நாய்க்குமிட்டுத்
துங்கமடு நீர்பருகித் துய்த்து. (௧௮)

வந்துமணி மௌலிபுனை மன்னவர்மன் முன்பிறைஞ்சி
யெந்தையினி யெங்களுக்கே யென்னைவிடு - மிந்தவிடத்
தற்றவிலங் குட்சில்ல வுய்த்தகனை வேல்பணைத்துச்
செற்றுவலை சேணகன்ற வென்று. (௧௯)

வினையினர்கள் கேட்டிறைவன் வேடுவரை நோக்கி
யெனுதகருத் தின்றவிலங் கெல்லாம் - வினாசமுறச்
செய்தலைகள் சென்றதிசை தோறணுகிப் பின்னைகரி
யெய்தவதென் றேறியுய்த்தான் றேர். (௨௦)

கோன்பதமத் தாள்வணங்கிக் கோட்டுசிலைக் கைக்குறவர்
கான்படர்ந்த காற்கவடார்ப் பேபற்றி - யான்பரவைக்
கூட்டமெலாங் கொன்று குறுங்காட்டைச் செங்கனலிக்
கூட்டினர்க ளொல்லை யுணவு. (௨௧)

செந்தழற்குத் தப்பிச் சிலமிருகம் பாய்ந்தோடி
முந்துதமை யேய முனிவனெதிர் - வந்தவிழக்
கண்டவனுட் பொங்கிச் கணக்கிலமா விட்டவைமீண்
டண்டினவைத் தாறென்கொ லென்று. (௨௨)

எண்ணி யிளைத்ததன்பா லெய்தியவவ் வெவ்விலங்கைக்
கண்ணுற்றஞ் சாநிரேனக் கையமைந்து - கண்ணியவட்
செய்ததற்றார் வேர்தனுவமைச் செய்ததற் செப்புமென
வைதனைத்தஞ் சொற்ற வவை. (௨௩)

அந்தமொழி கேட்டறவோ னங்கு விழித்தவைகள்
சிந்த விழித்துச் சிரித்துக்கை - கந்தமுண்
காசிமிசை வைத்தே சரயு நதியொழுகுங்
கோசலமா மன்னைவெல்பாக் கு. (௨௪)

உன்னி யகல்விசும்பி னுள்ளாரும் பாரசழ்ந்தோர்
வன்னெடுங்கோட் டேந்தியமால் வன்றியோ - மன்னுயிரைக்
கொன்றுணும்வெவ் கூற்றமுரட் கோலவுருத் தாங்கியதோ
வென்றயிர்ப்பங் கெய்த் வுளத்து. (௨௫)

பொன்னுருவும் புட்பரா கத்தைப் புரைமிடறு
மின்னுமணிச் செவ்விழியும் பைம்முகமுங் - துன்னுபிறை
நேரெயிறுந் தப்படியு நீல நிறக்குரமுஞ்
சாரெருழி தன்றவத்தாற் றந்து. (௨௬)

கோக்கியதை நீசென்று நோன்கழற்கால் வீரரொடு
தாக்கிச் சிலையெயினர் தம்முயிரைப் - போக்கித்
திரிசங்கு பெற்றெடுத்த செல்வனைத்தான் கொண்டு
விரைவிற்கு விட்டேகென் றான். (௨௭)

அந்த விருடி யடிவணங்கி யக்களிறு
வந்தெனச்சென் றங்கணாயன் வாகினியோ - டேந்துசர
விற்புளிஞர் தம்மையெலாம் வீட்டியது கூரெயிற்றுக்
கற்பெயர்த்தோ டிற்றுக் கறை. (௨௮)

தப்பியொரு வேடன் றராபதிதாள் சென்றிறைஞ்சிச்
செப்பினனஞ் சேனையையெல் லாஞ்சிதைத்த - தொப்பிளா
வெய்ய வராகமொன் றுமேவியிவட் டேரினைநீ
யைய திரித்தருள்க வென்று. (௨௯)

சொற்ற வுரைசெவியிற் றோய்தலுமே மன்னவர்கோன்
செற்றமனத் தோங்கச் சிரித்தின்றீண் - டிற்றவர்தம்
மாவியின்கண் மைத்தேகம் மாவியெனுக் கையெடுத்துத்
தேவிதரு செம்பொற் சிலை. (௩௰)

தங்கச் சயந்தனத்தைச் சாரதிவல் லூரப்போய்த்
துங்கக் கரிபரியைத் தூளாக்கி - யங்கெதிர்த்தே
சார்தருவெங் கேழற் றடநதன்மே லூய்த்திட்டான்
கூர்தருகோ லொன்று குறித்து. (௩௧)

உய்த்தகணை யோசனையோர் பத்தக்கப் பாற்கொடுபோய்
வைத்திட லும் பைங்கழைநீள் வான்கிரிமே - னெய்த்தவுட
னின்றுதிரஞ் சோர நெடுங்கிருட்டி கௌசிகன்பாற்
றன்றவலமூர் தங்கோடிற் று. (௩௨)

சிதறுண்டு போய படைஞரெலாஞ் சேர்ந்து
பதுமத்தான் வந்து பரவ - வதிபன்று
னஞ்சாதி ரென்னுவங் கையமைத்துத் தேர்நடத்திச்
செஞ்சோரி வார்களத்தட் சென்று. (௩௩)

சேனையவட் பட்ட புதுமை தெரிசித்தே
யேனமதைக் கொல்லவுளத் தெண்ணியது - போனதிசை
காற்சுவடு பற்றிப்போய்க் கானம் பலபுகுந்து
மேற்செறிய தூளி மிக. (௩௪)

போர்த்தனைத்தான் சைவலமும் பொற்பிரச முண்டகமுங்
சாந்திமிரு சாவியொடு ஞாளிகமு - மார்ந்துகிரஞ்
செய்ய குமுதமுந்தோ டாமைவரால் சங்குறலாற்
றையணிகர் தெண்ணீர்த் தடம். (௩௫)

மண்டலத்திற் பாயிருளை வாரியுண்டு செங்கரத்தால்
விண்டலத்தின் மேவருக்கன் வேர்தார்பிரா - னண்டிரதஞ்
சென்றெழூர்து தன்மெய் செறிந்ததுகண் மன்னவற்றுன்
றான்றருட முக்கிர் துணைந்து. (௩௬)

பின்றொடர்ந்த மந்திரிமார் பின்னிடையாத் தானைமன்னர்
வென்றியரிச் சந்திரனு மேலூர்தி - கின்றிழிந்து
பொய்கைசூழ் சீர்குடைந்தண் டாறிப்பூ ரித்திருந்தார்
மைதுலவு பூம்பொதும்பர் வாய். (௩௭)

தேவனங் கொண்மார் சிலமுனிவ ராங்கணைந்தார்
காதயில்வேற் றானையொடு காவலற்பார்த் - தோதினரீண்
டாதவெவன் போந்தா யடலைசெயுஞ் சாபத்தாற்
காதிமகன் கண்டக்கா லென்று. (௩௮)

என்னைவ் வடிகட்குச் சிற்றமடி யேனிடத்துக்
கொன்னுமவர் கியான்றுயின்ற குற்றமற்றுள் - டென்னி
னவைதிருத்திப் பின்ன ரகல்கைகட னென்றுக்
குவிகரத்தோ டாங்குணர்த்தான் கோன். (௩௯)

மன்னிசைத்த மாற்றமது மாதவத்தோர் கேட்டனர்கள்
பின்னிகழ்வ காண்டியெனப் பேசினர்கண் - மன்னகன்றுர்
பின்பிரவு துன்னப் பிரியையொடு கூடாரத்
தன்பினுற்றுக் கண்வளர்ந்தா னால். (௪௦)

தாதவிழ்தார்ப் பார்த்திவர்கள் சார்ந்தறுவை யிற்றுயின்றுர்
பாதவத்தின் கீழ்த்துயின்ற பாய்பரிதே சா - லாதவன்பூங்
காவிற் றெழுநியெழக் கங்குலறத் தோன்றினனின்
வாவி மனாமலர வந்து. (௪௧)

சேனையொடு தோரசர் யாரு முணர்ந்தெழுந்தார்
வானமணி வாய்ச்கனவி வள்ளலெழுந் - தானுலவு
மீனவிழி மெல்லியலாள் வேந்தனச்ச மோர்ந்திறைவ
னான்றிற னிழ்கெவனென் றுள். (௪௨)

வானமிழ்த நாணுமொழி மானே நெருநலிரா
வூனமுறு போர்கனவு கண்டுணர்ந்தேன் – யானென்
றிறையளித்துத் தூதனைவேந் தேயினனு லோனை
யிறையினிவட் டக்கிடுதி ரென்று. (௪௩)

இமைப்பினிலத் தூதுவர்தா மேகி யழைப்ப
வமைச்சரெலா மொல்லை யணுகி – யமைமக்கடிலேன்
னடைய வழைத்தபரி சென்னருள்க வென்றரையன்
செய்யகழல் போற்றிநின்றார் சேர்ந்து. (௪௪)

அந்நிலை மற்றவர்ப்பார்த் தண்ண லெனைப் பர்ந
தந்தைதனு வோடுவனை சார்ந்தவனின் – மைந்தனோ
தாரகைலோ கத்தே தவிர்ந்தபின்னு னைத்தம –
வாராமுயங் காவிருந்தே னூல். (௪௫)

யானே யருந்தவத்தோற் கிந்தனனோர் பேதையைப் பேய்ந்
தானே யொருத்தியவற் சார்ந்தனனு – டானற்றோர்
மாதகன்றாள் கண்ணிழந்தான் மற்றொருத்தி நின்றனளோர்
கோதை யுறுதி கொடுத்து. (௪௬)

இன்னணம்யா னென்ன விராக்கனவி னேன்சண்ட
ரென்ன வினிவினையு மோவறியேன் – கொன்னுமிந்தச்
சொப்பனத்தாற் சார்திறனைச் சூழ்ந்துளத்து நீயிரெலா
மிப்பொழுதிங் கேயுணர்க்கென் றான். (௪௭)

ஐவகையங் கத்துடனே யாள்வினைவன் கண்குடிகாப்
பையமறக் கற்றறித லாங்குடையோன் – றுய்யமனச்
சத்தியகீர்த் திப்பெயரோன் றன்பிருது பௌத்திரனைக்
கைத்தலங்கூப் பித்தொழுது கண்டு. (௪௮)

இந்த வினையெல்லா மெழுந்தவிறற் கௌசிகனு
லந்தமுனி யாலனைய மேலகந்த – மந்திரி
காடு நகரிழந்து நங்கைமகன் வெவ்வேறு
நாடவினைப் பின்வேறும் யாம். (௪௯)

என்றறைய மன்னு வெனைமகனை யிக்காட்டை
வென்றிபுக் தாளும் விதிர்தருறை - யொன்று
மிழவர்க வென்னு விசைத்தா ளிறைவன்
கழலளிவை தாழ்ந்த க்கிந்த. (௨௰)

கேட்டமைச்ச ரெல்லோருங் கேழ்கிளர்கண் ணீருவீ
காட்டக் கலுழ்ந்தனர்கள் கண்டோழிமின் - வாட்டேதய
சென்றவனைத் தேற்றியினி தெந்தவிருக் தானப்பாத்
றண்றியவை சொல்வாந் தொருத்த. (௨௰௧)

வேட்டஞ்செய்காண்டம் முற்றிற்று. ஆ உ அ அ:

---

## சூழ்வினைக்காண்டம்.

---

சூடிநழீஇக் கோலோச்சுங் கோசலநாட் டண்ணல்
விடுபகழி மெய்யதா வோடித் - தடிதடித்துக்
கோசிகன்முற் றன்பட்ட பாடனைத்துங் கூறியதால்
வீசெயிற்றுக் கோலம் விழுந்து. (௧)

காட்டஞ் சிவந்துறுவ ஞசிவிட்ட மூச்சினளிக்
கூட்டுமலர்க் கூந்த லிருப்பசியுங் - கோட்டமுறும்
பொற்பினிரு சண்டாளப் பூவையர்க டோன்றியவன்
பற்பவடி நின்றார் பணிந்து. (௨)

கண்டழைத்துக் காதிகுத னெண்ணெண் கலைகளையப்
பெண்டிருக்குப் பெட்பிற் புகட்டினனும் - கண்டியவத்
தூழ்க்தறவோர் கொற்றத் தரிச்சந் திரன்றனத்தோ
டாழ்ந்ததடத் துற்றனனென் றார். (௩)

எண்ணியதன் னெண்ணமெலா மீடேறு மென்றெம்ப
வண்ணிமுனி நங்கையர்ப்பார்த் தின்னேபோய்ப் - பண்ணிய
வாசித்தக் கோமான் மதிக்குடையல் லாற்கலவி [ல்யாழ்
சேசித்துக் கொண்டேறக கீர். (௪)

என்றுவிடை நல்கலுமே யேந்திழையார் மற்றவனை
நன்றிறைஞ்சி யேகி நறுங்கமலர் - தன்றிலஞ்சி
மாட்டுறையுஞ் சோதி மணிமகுடக் கொற்றவனைத்
தாட்டுணைமுற் றாழ்ந்துநின்று தான். (௫)

மன்னு நினதெழிலை வண்மைதனைப் பார்த்தியம்பப்
பன்னுக்க ளுங்கள் படைத்திலமா - லென்று
வியந்துரைத்தார் கேட்டிறைவன் மின்னனையீர் நீர்யார்
நயந்தடுத்த தென்னவில்லென் றான். (௬)

கன்ன லனுக்குமின்சொற் காரிகையார் காவலனே
மின்னெழிலி னாங்கிவ் விபினத்து - மன்னுறும்யா
நீசப் புலைச்சியர்க ணின்கழலைக் கண்டிறைஞ்ச
வாசைப் படீஇயடைந்தே மால். (௭)

புல்லறிவி னோயேங்கள் போற்றிசையாழ் கீதமொடு
வல்லம் வறிநின்று கேட்கவென்றைச் - சொல்லியெடுத்
தியாழ்மா டகமுறுக்கித் தந்தியினி தேதடவிக்
கேழோ வியத்திற் கிளர்ந்து. (௮)

காரதனுங் கின்னரரு நாணமுறப் பட்டமரம்
பாரதனிற் பல்லவங்கள் காட்டநவை - சீரவிநந்
தேழிசையும் பாடினர்க ளிந்தமதி யோடிரு
வாழுகலத் தண்ணன் மகிழ்ந்து. (௯)

தன்மருங்கு லார்வதன நோக்கி மலர்க் கையளமத்தே
யொன்மணிப்பூண் பீதாம் பரமுதவிக் - கொண்மெனலு
மின்னவையாங் கொள்ளியரீன் டெண்ணியடைந் தேமல்லே
முன்னியவை கேட்க வுவந்து. (௧௦)

இல்லையென தெண்ணியதொன் றேற்போர்க் களிக்குமன்னு
சொல்லுமிவை நின்னருளாற் றுன்னியவோ - முல்லிலெழுர்
திங்களனிகர் நின்றன் செழுங்கவிகை யீந்தருளா
யெங்களுக்கின் றென்றா ரெடுத்து. (௧௧)

தொன்றுதொட்டு வந்த தலக்கு மணிக்குடையை
யின்றுமக்கி யான்வழங்க லாற்றேனீ - நன்றுவே
றொன்றினைநீ வேண்டு நரவலன்மன் னென்றுரைத்தான்
குன்றினைநே ரம்புயத்துக் கோன். (கஉ)

கேட்டதனைப் பச்சையிளங் கிள்ளைமொழி யாரிறைவ
மாட்டாய் மணிக்கவிகை நல்கவெனிற் - றோட்டிணையைப்
புல்லியெமக் கின்பம் புரந்தருள்க வென்றுவெய்ச்
சொல்லமைச்சன் றோகையர்ப்பார்த் து. (கங)

கொடுப்ப கொடுப்பர் கொடாத கொடாஅர்
விடுப்ப விடுப்பர் விடாத - விடுக்கிலராற்
சொல்லத் தகுவனநீர் சொல்லி யப்பகொள்க
வல்லதுசெல் கென்றறைந்தா னங்கு. (க௪)

வள்ளலென யாமடைந்தேம் வந்திரப்போர்க் கொன்றீயாக்
கள்ளனெனக் கண்டால் வருதலமென் - றள்ளிலைவேற்
கண்ணார் புகன்றார் கதமடைந்து தள்ளுமென்றான்
மண்ணாளும் வேந்தன் மனத்து. (கரு)

கேகயமன் னார்தம்மைக் கிங்கரர்தன் வாளுறநூக்
தேக நடுங்கியவர் செங்கையின்யாழ் - போகவிட்டு
நண்ணரிய காட்டோடி நன்குதிர முட்கீறும்
புண்ணொழுக நெஞ்சழிந்து போந்து. (கசு)

விட்டவிறற் கௌசிகன்முன் வீழ்ந்தலறி யாங்குற்றாம்
பட்டவிட ரெல்லாம் பகர்ந்தனர்கேட் - டட்டபுல
வாழ்க்கையன்வெங் கோப மனத்தெழக்கட் டீத்தெறிப்ப
மீக்குலவேற் றிற்சிரித்து வேர்த்து. (கஎ)

வேகத் துடனெழுந்து மெய்த்தவத்தோர் சூழ்ந்தவரப்
பூகத்தின் வாளையுகள் பொய்கையின்மாட் - டேகினன்கண்
டாங்கிறையன் சென்றெதிரி லந்தணவென் கோபமெனுத்
தாங்கினன்கம் மேலவன்பூந் தாள். (கஅ)

மாக்களைமுன் சொன்னாய் வராகத்திற் கூறுசெய்தாய்
பூக்குழலென் காதற் புதல்வியர்தம் - வாக்கிலெழும்
பாட்டைப் பழித்தாய் படுபாவி நீயென்றான்
கேட்டைக் குறித்தமுனி கேட்டு. (௧௯)

நாடுநகர் பூம்பொழிலை நாசப் படுத்திடினு
மீடுடைய நீவிடுத்தா யென்றறிந்தா - னிகளை [யைத்
தூய்விலங்கை வீட்டுவனே தொல்வினையேன் செய்பிழை
தாயைநிகர்த் தாய்பொறுக்கென் றான். (௨௦)

வேந்தனுரை காதிலுற விச்சுவா மித்திரன்றான்
சேந்தவிழி நோக்கித் தெரிவையர்பாப் - போந்திசைத்தா
லன்னா நீயடித்தே யாங்கோட்டு காரணமற்
றென்னுடென் றானே யிடித்து. (௨௧)

தக்கபடி பேசாத தன்மையினா லீர்நின்ற
விக்குமொழி யேந்திழையார்த் தள்ளுவித்தேன் - புக்கதினீ
தன்றியுநின் மக்களிய ரென்ப தறிந்திலன்யா
னின்றிதனை நீசமிக்க வென்று. (௨௨)

ஓதி மலர்ப்பதத்தை யொண்முடிசேர்த் தானிருபன்
கோத மகலாத கோசிகனென் - கோதையரா
நீவதவை செய்தக்கா லின்பிழையை யான்பொறுப்பேன்
காவலனே காணென்றா னால். (௨௩)

வேத முடிவுணர்ந்தோய் வேந்தர் புலக்குலத்து
மாதர்தமை வேட்டன் மரபோவென் - றோதினன்மன்
சாவத்தாற் சண்டாள னானவன் சேய் நீயிவரை
மேவத் தருமென்றான் விண்டு. (௨௪)

அன்றமல ரோன்மதலை யாடுகொடுஞ் சாபத்தாற்
றன்றபுலை தீர்த்திட்ட தூயோனே - யின்றெனைநீ
சண்டாள னாக்கத் தனிமனத்து மெண்ணியதென்
விண்டே விளம்பென்றான் வேந்து. (௨௫)

முன்னுனது தாரை முழுப்புலையை நீக்கினனு
மின்னுமது செய்த லெனக்கரிதன் - றென்னுரைகேட்
டேந்தலே யானின்ற வேழையனைச் சேர்கென்றுன்
வாய்ந்தவிறற் காதி மகன். (௨௬)

அம்மொழியு மன்னன் மறுத்திடலு மவ்விருடி
வெம்மையழ லென்ன விழிசிவந்தே - யிம்மனிடை
வெட்டிமைசெய் பஞ்சமற்கு வேந்தநொழும் பாதியென
விட்டனன்வெஞ் சாப மெடுத்து. (௨௭)

அன்னையன்று வென்னை யறச்சி றிடின்வெருவ
லென்னகவில் வாரா திருநிலத்தே - யென்னகரு
காசிநிதி வேண்டிடினு நல்குவனிப் பெண்டிரையான்
கூடலனென் றன்கோன் குனிந்து. (௨௮)

சொன்னமொழி நப்பாமற் றேன்று விணியெனக்கு
கன்னரவை நீர்வார்த்து நல்கிலை - யென்னமுனி
சொற்றிடலுங் கேட்டுச் சுடர்கழற்கான் மன்னவர்கோன்
மற்றவகை செய்தான் மகிழ்ந்து. (௨௯)

இவ்வுலகை யானுள யேர்தனினை தாழ்முடி
தெவ்வவிலான் சேயுஞ் செய்யகழ - லவ்வி விழி
மாதணியு மைந்தன் மணிப்பணியுந் தவெல் லுன்
மாதவன்வ ளல்வதனம் பார்த்து. (௩௦)

அன்னவகை யெல்லா மளித்துநின்ற கோமானைப்
பின்னருமக் காதிசுதன் பேசினன்கண் - டின்னவைமன்
வீடுபெறத் தந்தனை நீ மெல்லியல்சேய் சாத்துவிலை
நீடுடையை நீட்டியக லென்று. (௩௧)

ஆனையினிப் போயிரப்போ மாடையளித் தாலெனக்கோன்
கூரணுர்கொண் டானுணர்ந்து கோசிகன்றன் - சீரையினை
மூவகையாக் கீழ்ந்திட்டா னேற்றுன் முனியாது
தாவிநிரு சங்குமகன் ரூழ்ந்து. (௩௨)

தாநுந் தனிசமனுந் தையலுஞ்செங் கற்றூணியை
மானங் கெடாமை மகிழ்ந்துடுத்தார் - வானுமண்ணும்
போற்றுமிறை பிற்கழித்த பொற்கலையைக் கொண்டுவைத்தா
னூற்றலற வோன்முன் பணிந்து. (௧௩)

மெய்த்தவனே நல்காய் விடையெனக்கென் றானிருபன்
குத்திரமார் நெஞ்சத்துக் கோசிகன்கேட் - டித்தினத்தே
யானறிஞர் வக்கிரப்ப விட்டிற்கு நேர்ந்தபொரு
ணீநல்கி நீங்கென்றா னால். (௧௪)

எப்பொருளு நாடுநக ரெய்ந்தாய் நினக்களித்தே
னிப்பொழுதென் பால்யாது மில்லைமொழி - தப்பலன்யா
னன்றிரங்கி நீயவதி நல்கியெனக் காள்விட்டா
னன்றபொரு ளீவலென்றான் மன். (௧௫)

சொற்றிறம்பு வாயாயிற் சூளுறவே தென்றிறையை
நற்றவத்தோன் கேட்டா னரேந்திரன்யான் - சொற்றவறி
னன்னியன்ற னாயிழையை யாதரித்தன் னான்கடைவாய்
மன்னுமவ னாவனென்றான் மன். (௧௬)

காற்பதின்மே லெட்டியைந்த நாளையிலென் னுள்கரத்தின்
பாற்பொழிவாய் பொன்னெல்லாம் பார்த்திவனே - மேற்புகன்ற
காலத்து னல்காயேற் காசுனக்காங் காணென்றான்
கோலச் சடைமுனிவர் கோன். (௧௭)

வணங்கிவிடை பெற்றகலு மன்னவனைக் கூய்நீ
யிணங்கியெனக் கீந்தபொரு ளெல்லாங் - குணஞ்சிறந்தோ
யென்னுடனே வந்தபதி யேகொப்புத் தருதென்றான்
மன்னுதவக் கௌசிகனு மன். (௧௮)

அவ்வண்ணம் யான்புரிவ லந்தணநீ போதசெனச்
செவ்வண்ண நெஞ்சிறைவன் செப்பினனாற் - றெவ்வண்ண
வொண்ணைப் புரிசகத் தொப்பனைசெய் தாரவன்முன்
னன்னாச் சிலமுனிவர் நன்கு. (௧௯)

காவலனுங் காதலனுங் காரிகையுங் கானடந்து
மேவமத மாவிவுளி மேலேறித் - தாவதர்பின்
பேர்தமுனஞ் சேனைசெலப் பொன்னிரத மீதிவர்ந்து
மாதவனவ் வாவி யகன்று. (௪௦)

மாநகரில் வாழுநர்தம் மன்னனையெதிர் கொள்ளவுற்றுத்
தேனருதா ரோதித் திருவொடுசேய் - மானவனுந்
தேர்மிசைவா ராமே திருவடிகள் சேப்பவரல்
கார்விழியாற் கண்டுருப்ப நீர். (௪௧)

வல்லை யயோத்தி வளநகரி பின்புறத்துப்
புல்லுபுதேர் விட்டிழிந்தான் பூபாலன் - சொல்லிருடி
தன்னோக ருட்கொடுபோய்த் தன்பொருளெல் லாந்தந்தே
மின்னுமரி யாதனத்தின் மீது. (௪௨)

வீற்றிருப்பச் செய்தவனை வேரிமலர்த் தாள்பரவிப்
போற்றிநின்றான் போந்த புரவலரு - நூற்றுறைதேர்
மந்திரிமார் மங்கையரு மன்னரும்பின் னவ்வறிஞன்
சுந்தரத்தா டாழ்ந்து துதித்து. (௪௩)

நிற்கின்ற தங்க ணிருபனைக்கண் டேயழூதார்
கற்சொன்ற தோளரசன் கையமைந்திலன் - டெற்கொன்று
மண்பொடுநீர் முன்செய்த வப்பரிசே யிம்முனிவற்
கின்புறுமா செய்கமுறை யின்று. (௪௪)

என்றியம்பி னுன்வினவி யெல்லோரும் வள்ளலடி
நன்றிறைஞ்சி வாய்புதைத்து மெய்ந்நடுங்கி - நின்றிறைவ
நின்னுரையை யார்மறுப்பர் நீநலிகி லென்றழூதா
னன்னதவன் பார்த்தவச னுய். (௪௫)

இந்நகரு நாடு மிருந்தியு நீமகற்கு
முன்னளிக்க சேர்ந்தபொருண் முற்றுமியான் - மன்னிழப்பே
னென்மகளிர் தம்மைமணர் திங்கிருத்தி யென்றிறைவன்
பொன்மலர்க்கை தொட்டான் புரிந்து. (௪௬)

புல்லருந்து மேயரிமாப் பொங்குபசி யுற்றாலு
நல்லமறை கற்றுணர்ந்தோய் நானுனக்குச் - சொல்லலுமன்
வேண்டுமோ விச்சொல் விடுகவெனா வேதியன்கால்
பூண்டனன்கை யாற்கோசல் புகன்று. (௪௭)

ஆயி னெனதுபொருட் காளைவிடு வேனாளைப்
போயகனீ மன்னு புறத்தின்றென் - றாயுமறைக்
கோசிகன்சொற் றான்வினவிக் கோசலர்கோ னாயேன்செய்
யாசெவையு நீபொறுத்தி யால். (௪௮)

என்றுபுலஞ் செற்றோ னிணைச்சரண்மேல் வீழ்ந்திருந்தா
னன்றெழுதி நான்சமித்தே னற்குணத்தோ-யென்றறவோன்
சொல்ல வெழுந்திருந்து தோன்ற லமைச்சரைக்கை
மெல்லப் பிடித்து விழைந்து. (௪௯)

காட்டியிவர் செய்யுங் கடும்பிழையு நீகருத
னீட்டுசடை யோய்நின் னடைக்கலமென் - றேட்டளக
மாதுடனே சேயை வணங்குவித்துப் போற்றிவிடை
நீதருகென் றானகன்றா னேர்ந்து. (௫௦)

முப்புரிநூன் மார்பு முதுமறைநேர் நாவினொடு
துப்புறழ்நீள் வேணியுள தூயோர்க - ளொப்புடையுஞ்
சூழமுடி வேந்தர் தலைதந்திறைஞ்சக் கௌசிகனு
மாழியுல காண்டா னமர்ந்து. (௫௧)

சூழ்வினைக்காண்டம் முற்றிற்று. ஆ. ௩௩௯.

---

## நகர்நீங்கியகாண்டம்.

---

அப்பா லுலகனைத்து மந்தணனுக் கீந்தன்பி
னெப்பாலுஞ் சொன்னிறைத்த வேந்தலவிர் - துப்பாரும்
வாயணங்கும் காதன் மகனு முடன்வரப்பொற்
கோயினின்றுங் கோலமறு குற்று. (௧)

கண்டவர்க ளெல்லோருங் காலமழை யாநித்தன்
கொண்டளிக்குந் தாயில் குழவியொடு – முண்டகமும்
பைங்கூழு மாகப் படர்ந்துசர யுத்துறையை
யங்கானை நீங்கி யடைந்து. (௨)

அந்நதியின் கூலத் தளிமிழற்றும் பூம்பொழில்வாய்ப்
பின்னமுது பெட்பினுற்ற மந்திரியர் – மன்னனொடு
புக்கிருந்தான் மேலைப் புணரியிடைப் போய்விழுந்தான்
செக்கதிரோன் றீமைபொறான் சேந்து. (௩)

அக்காலை யாங்கணிகழ் செய்தியறி வான்முனிவன்
புக்கான் கரந்துறைந்தான் பூபதிமீண் – டக்கால
மீங்களையா யென்றமன்ன னென்னைப்பார்த் தண்ணலினி
யீங்களையேன் மீண்டென்றா னே. (௪)

அந்தவுரை கேட்டிளைந்தார் வேந்த ரமாத்தியர்பின்
பெந்தமிறை வாயா மிதுபொழுதவ் – வந்தணனை
வேணிபிடித் தீர்த்துவன மேவச்செய் கின்றனனீ
யேணிபுரப் பான்வருகென் றார். (௫)

மன்னன் விளையதனை மாபாவ மாமந்தோ
முன்னளித்த வாங்கன் முடிந்தாலு – மென்னுயிர்யான்
கோசிகனுக் கீந்தவள நாடினிக்கொள் ளேனென்று
பேசமுனி கேட்டெதிர்ந்தான் பேர்ந்து. (௬)

கண்டெழுந்து தாழ்ந்தரச னின்றிடலுங் காதிமகன்
கண்டவனைக் காவலநீ யெற்களித்த – மண்டலத்தை
வாங்கிலையேல் யான்வழங்க மற்றிவர்க ளின்றுரைத்த
தீங்கனைத்துஞ் செய்தையென்றான் நேர்ந்து. (௭)

இன்னாசெய் தார்க்கு மினியசெயுஞ் சால்புடையா
யுன்னாதி யின்றிவர்க ளோதுபிழை – முன்னேநிற்
கீந்த வரசுரிமை யானினிவாங் கேனென்றான்
வேந்தனவ னுற்றான் மெலிவு. (௮)

என்னையிவர் வைதபிழை யான்பொறுத்தேன் வேள்விக்கு
முன்னளிப்ப னென்றபொருண் முற்றுமெற்கு - மன்னவநீ
நல்குவையோ நல்காயோ வென்றுரைத்தான் மாமுனிவன்
கொல்களிற்றுக் கோனதனைக் கேட்டு. (௯)

வாழ்வவள நாடனைத்து மாதவயா னிற்கீந்த
போழ்திப் பொருளுமுடன் போனதெனச் - சூழ்வுற்றே
னாயினுங்கோ பத்தா லளிப்பனென்ற சூள்வழுவே
னாயனையே னல்குவ னிப் பொன். (௧௦)

நீவிடுக வாளென்று நீத்தவன்பூந் தாள்பணிந்தா
னீவதுமுன் மாற்றிவிழி யொன்றிழந்த - தேவனைக்கூய்
வீறுதவ விச்சுவா மித்திரன்றா னன்னவனை
வேறிடத்தே வைத்து விழைந்து. (௧௧)

ஆணையின்மே னின்றெறியு மக்கவண்கற் போமளவு
மானபொரு ளீபோ யளித்தாற்கொள் - போனநிற்கு
வேதனமும் வேந்தன்பால் வேண்டுகெனி யாதிதந்தா
லோதனங்கே ளேலா துவர்ந்து. (௧௨)

சொன்றிதரின் வேண்டாவென் றான்றலிவ னாண்பெற்றா
லன்றுநிதி நல்கா தகலனுணற் - கென்றுதடு
நங்கெடுவு நண்ணிற் கரிகுறித்து நின்றவரைத்
தங்கலைவா மற்றைநா டான். (௧௩)

மன்ன யிதற்குரைத்த மாநிதிநல் கேனென்றா
ஓன்னரசை வாங்கி யுதவுவனென் - னன்னதற்குச்
சம்மதித்தாற் கொண்டனைதி சாலுநமக் கஃதென்னா
யம்மவியம் பாக்கூட்டி விட்டு. (௧௪)

வள்ளலுக்கு நல்கிவிடை வந்தவழி மீண்டகன்றான்
வள்ளிலைவேற் சேனை மகிபரொடு - தெள்ளுமதி
மந்திரியர் தம்மையெலா மாதவன்பின் னேகமொழி
தந்ததிரி சங்குமகன் றான். (௧௫)

உத்தமநீ நீப்பினுயிர் வாழலன்யா னென்றுற்ற
சத்தியகீர்த் திப்பெயரோன் முன்ஞெட்டாத் - தைந்தியர்தந்
தேசிகன்முன் போதத் தெரிலைவசுதன் சேர்ந்தவர
மூசிருள்போ முன்ன ரெழுந்து. (கசு)

பாதமலர் கன்ற வயோத்திப் பதிகடந்து
மீதழலை வீசுகர மேவியவட் - காதலனைத்
தோனி லமைச்சன் சுமந்தியங்கப் புன்புழுப்போற்
பானைக் குழறுடிப்பப் பார்த்து. (கஎ)

பட்டமர மேடுசுழி பாறைவழி யெங்குமுனி
விட்டபணி தேள்குளவி வெம்பூரான் - கட்டேறவி
யீண்டி யிடர்விளைப்பத் திவினையை நொந்தகன்று
கூண்டினனற் கோமதிப்பே ராறு. (கஅ)

என்மரபி லுற்றவிவ னின்னலினி நோக்கியிரே
னென்னுமவ னென்னவெல்லோர் பேய்மறைந்தா-னன்ன
தன்னாடை நங்கைமக னன்னனறி வன்மிறையைத் [பொழு
தன்னியற னுண்டிருந்தார் சோர்ந்த. (ககூ)

மார்க்க நடந்த வருத்தமறி மந்திரிதான்
பார்க்கலனுய்ப் பல்காய் பழங்கிழங்கு - பூச்சமழுஞ்
சோலைவனம் புக்குந் துரிஇர்கொண்டு வந்துசெய்ய
கோவிறைமுன் வைத்தான் குனிந்து. (உ0)

கண்டெடுத்த நல்ல கனியவற்றுட் கோசலர்கோ
னுண்டருணீ யுந்தமவென் றீந்திறைஞ்ச - மண்டினெனங்
கொண்டிகவி யுண்டிவற்றைக் குக்கினர்க் கேன்பானெய்
வண்டயிர்சோ றல்லதென்முன் மற்று. (உக)

எங்களர சையமுனிக் கீந்தட்வி புக்கவெமைப்
பங்கமிலான் பாலடிமி னிகேட்பி - னெங்ஙனிப்போய்த்
தேடிக் கொணர்ந்தளிப்பே மென்றிறைவன் சிதகன்பொற்
றூபினைவி யோபணிந் தான். (உஉ)

சத்திரங்கி வெள்ளி தருபலகீ ருண்டமர்ந்தான்
மத்திறைசேய் மங்கையொடு மந்திரியும் - பொற்றடக்கை
யார்க்கனியைக் கொண்டருந்தி யாம்பருகிப் பூற்றனைப்பாய்ப்
பார்க்கண் டுயின்றார் படுத்து. (உ௩)

கோசிகன்ற னுணையினுற் கொண்மூ விடித்துமின்னி
யாசுகமும் வேகமுட னுங்கெழும்பி - வீசமழை
யூற்றானைத் தாடை யுடைடுப் பார்க்கவனைப்
பாற்றினஞ்சூழ் வேற்காத்தோன் பார்த்து. (உ௪)

மாறுவது மில்லை மழைதான் சதுமறையோ
யாறுபெரு முன்ன மப்புறத்தே - சேறுமென
வீரமிலாச் சுக்கிரனீ ரேகுநகர் தோறுமுறக்
காரணமெற் சென்னென்று காண். (உ௫)

எந்நகரிற் புக்கே மிடைவனத்தை விட்டினியோர்
நன் னகரஞ் சேர்தாலங் நாளடியேன் - சொன்னபொரு
ளிற்களிப்பன் வேதியனே நீவருக வென்றரசன்
சொற்கவியைத் தாழ்ந்தான் றுதித்து. (உ௬)

வஞ்சமுனி மாற்ற மதித்தெழுந்தான் சல்லியனு
மஞ்சனைத்தோள் வைத்தமைச்சன் முன்னடப்ப-வஞ்சிகர
மோர்காத்திற் கோன்பற்றி யோர்காத்திற் கோலூன்றி
யூர்குடிலனு தன்னுளிழிந் துற்று. (உ௭)

நீந்திக் கரையேறி யாங்கொருசார் நீள்பழுவத்
தேய்ந்திருப்பக் காதிமக னேவியபேய் - காந்தவிழிப்
பூதமுன்பின் வந்து புரிந்த கொடுமையினை
யோதமுடி யாதனந்தற் கும். (உ௮)

மாரியொடு வல்லிருளு மாய்ந்தொழியக் காலிலியூர்
தேரிலனைத் தான்சாயா தேவிபதி - தாரினன்முன்
னைவருமற் றத்தலத்தை விட்டகன்று கங்கையெனுந்
துய்யநதி சார்ந்து திளைந்து. (உ௯)

பல்வளனும் பார்த்தந்தப் பாகீ ரதிதன்னிற்
சொல்விதியாற் றோய்ந்திழிந்து நீந்தியெதிர் - புல்கலைமே
லேறியவ னோர்பொழிற்க ணெய்தினர்க ளெய்தினனற்
சிறிரவி மேனாலை சென்று. (௧௦)

மாமுனிவன் மாயத்தால் வாரணமோ டென்ருகரு
மாமடங்கல் வெந்தரக்கு வந்தந்த - மாமலர்க்காத்
தன்னிலிறை மூன்றோர்க்குப் பீதி தவவிளைத்துப்
பின்னடைந்த தஞ்குழல் பேர்ந்து. (௧௧)

அன்னபொழு தாசா னரிச்சந் திரனைவிளித்
தென்னுரைகே ளின்றளவு முற்றவினை - தன்னமினி
மேறுறவ வெண்ணிலவாம் வேந்தமுனிக் கீயேனென்
னேலரசை வாங்கியளிப் பேன். (௧௨)

இன்னதியா னின்னுடைய விட்டளங்கண் டோதுகின்றேன்
பின்னனைவ காண்டியெனப் பேசினனு - லன்னதுகேட்
டன்றிசைத்த சொற்றவறே னையாவென் கேளுடனே
கொன்றிடினு மென்னையென்றான் கோன். (௧௩)

காலையவ னின்றுங் கனைகழற்காற் றார்வேந்தன்
கோலவிழி மங்கைபிறர் கூடவரக் - காலியங்கிச்
சோணமுறீஇத் தோய்ந்தகன்று காளிந்தி சேர்ந்தாடி
வீணையார் காவமர்ந்தா னோர்ந்து (௧௪)

மாயமனக் கௌசிகப்பேர் மாதவன்வந் தானவனைக்
காயுமிபக் காவலர்கோன் கண்டெழுந்து - போயிறைஞ்சி
யாரணநா னன்குணர்ந்த வாரியனே யீண்டடைந்த
தாரண மென் னென்றான் கசிந்து. (௧௫)

காதிசுதன் பார்த்திவனைக் கண்டடவி நீகுறுகி
வேதனையான் மெய்தளர்ந்தா யென்றுநொந்தே - னாதலினு
லெற்களித்த நாடேக ரில்லென் னலான்மணந்து
செற்குழலென் மக்களொடீ சேர். (௧௬)

வந்தனது நாட்டின் மகிழ்ந்தரசா ளென்றியம்ப
மந்தரத்தோண் மன்னன் முனிவகிற்குத் - தந்தபொருள்
பொய்புகன்று கொள்ளேன் புணரேனின் மக்களையெற்
கொய்திடினு மென்றான் குனிந்து. (௩௭)

மற்றதனைக் கேட்டு மறைமுனிவ னெஞ்சழன்று
வெற்றிமன்னா மேல்வருவ காண்டியெனாச் - சொற்றகன்று
சேய்க்கணின்று தீமைபல போதித்துச் சைகையினாற்
கூய்க்கவியைச் சென்றான் குழைந்து. (௩௮)

பின்னர்ப் பிருகு பெறுதனயன் வந்துறலு
மன்னமன்னாள் செல்வ னமைச்சனொடு - மன்னர்பிரா
னத்தலம்விட் டோர்கழைக்கா னாங்கியங்க விச்சுவா
மித்திரன்கூய் விட்டனன்வெந் தீ. (௩௯)

அவ்வனத்தை யங்கி யடர்ந்தெரிப்பக் கண்டிறைவ
னிவ்வழலிங் கேதெனலு மேந்தாலின் - றிவ்வன்னி
மன்மரபி லோருயிரை வாய்மடுத்த லாதேகா
தென்னவெள்ளி சொற்றா னெடுத்து. (௪௦)

செந்தழலோன் வெய்யபசி தீரவெனை யுண்ணியர்நீ
ருய்ந்தகல்க வென்றரச னோடினன்முன் - மந்திரியென்
புல்லுடலைத் தீக்களிப்பேன் பூபதிசெய் பொன்னைவிட்டுச்
செல்லலென்றான் சேவடியில் வீழ்ந்து. (௪௧)

சிதலை தினப்பட்ட வாலமர மூன்று
மதலையா மற்றதன்வீ ழூன்றே - கதழனற்கு
ளென்னின்றீர் யான்சென்று வீழ்வேனீர் மந்திரியோ
டின்னேபோ கென்றனனற் சேய். (௪௨)

தையலந்தச் சொற்கேட்டுத் தன்மகனை மோர்ந்துதழீஇச்
செய்யபற்கன் வீழ்ந்தில்லாய் செல்வனே - தெய்யவுனக்
கித்துணிவு மிவ்வறிவு மெங்கடுத்த தென்றுமுகங்
கைத்தலத்தின் மோதிக் கலுழ்ந்து. (௪௩)

மாதருக்குக் காதலரான் மைந்தரா லிவ்வுலகி
லாதரவா மாதவினீர் நின்மினென்று - வோதுபுசென்
றெல்லையண்ட கோளத்தை யுற்றடரு மச்சேர்ந்தார்க்
கொல்லிமுன நின்றுரும்பிட் டு. (௪௪)

மறைநெறிநில் லாமே வருவிருந்தோம் பாமே
முறைநிறம்பி மூத்தோ ரிகழ்ந்து - பிறர்பொருளை
வெளவியய லார்மேன் மனம்வைத்தே மாயினெனைச்
செவ்வழனீ செற்றிடுக வென்று. (௪௫)

பாய்ந்திடலும் பாவகன்றன் பாவை தனதுகற்பாஞ்
சேந்தவட வைத்தீத் தெறுநமையென் - றோர்ந்துளர்த்தி
லார்ப்படங்கிக் காலை யலர்கதிரைக் கண்டபனிப்
போர்ப்பெனவே போனான் மறைந்து. (௪௬)

மண்டு மழறணிய வான்வரைக்கான் முற்றுநெய்தல்
புண்டரிகம் பூத்திலஞ்சி யாய்ப்பொலியக் - கண்டுமகிழ்ந்
தாயிழையாள் கற்பை யரசன் புகழ்ந்தணைந்தான்
றாய்வா ரணவாசி சூழ்ந்து. (௪௭)

நகர்நீங்கியகாண்டம் முற்றிற்று. ஆ ௩௮௬.

---

## காசிகாண்டம்.

---

வாரணவா சிப்பெயரின் மாநகரின் வண்டுறையிற்
சிருசனன் மந்திரிசேய் தேவியொடு-வீரமிகு
கோனிறங்கி மெய்ச்சுருதி கூறுமுறை யான்மூழ்கி
யீனமற வேறி யிகந்து. (௧)

திண்களிறு மாய்கின்ற செந்நெற் கதிர்மிளிருந்
தண்கழனி சூழ்காசி சார்ந்தமறைப் - பண்குலவு
நாவினர்முன் னீரிருவர் நண்ணுமணி மாடநிரை
பாவுமறு கூடேகிப் பார்த்து. (௨)

மன்னுமணிக் கோயிலிடை வாழ்விசுவ நாதனடி
யெண்ணி யிறைஞ்சியகன் றேர்போதியி - னண்ணியவட்
கொண்டமைச்சன் றந்தபண்டங் கோதைசமைத் தன்பினிட்
வுண்டிருந்தா னூழ்வினையை யோர்ந்து. (௩)

அன்றடுத்த நாளி லசுரகுரு பார்த்திறையைக்
குன்றடுத்த தோளாய் கொடுத்தியெனி - னின்றுகொடு
வட்டபுல வாழ்க்கையன்முன் னுடுபொரு ணீயென்று
கட்டுரைத்தா னெஞ்சங் கனன்று. (௪)

எவ்வகையோ விப்பொருளை மின்றளிப்ப தென்றெண்ணித்
தெவ்வடுவேற் கோன்விழிநீர் சிந்திநிற்பக் - கொவ்வையிதழ்ப்
பொன்கண்டு மாற்றம் புகலா திறையபூலென்
பன்னென்று கேட்டாள் பரிந்து. (௫)

கன்னல் புளிக்குமின்சொற் காரிகையே நீயறியாப்
பொன்னுளதோ வெண்பாற் புகலென்று - மன்னிசைத்தா
னன்னதனைக் கேட்டுழுவ லன்புடைய மாதரசி
பின்னமொரு நாளவதிக் கெல். (௬)

பல்லகிலனர் தென்னை பதியெனையு மைந்தனையும்
வில்லவிநீ பொன்னென்றான் வேந்தனனி - யல்லலுழக்
தெல்லிதுவா மென்ன விறைவவிடு மோகமையூழ்
சொல்லுகென்றா ணங்கை துணிந்து. (௭)

ஆயினது செய்வலெனு வண்டலர்க்குச் சியமன்னுன்
றேயுமிடை மானின் சிரமிசையு - நேயமகன்
சென்னி மிசையுஞ் சிறுபுதல்வைத் தேகண்டார்
மன்னிரங்க மூன்னடத்தி மற்று. (௮)

முன்னை வினைமுடுகி முற்றுதலாற் றீவினையே
னென்னிளஞ்சே யில்லா ளிவர்களையின் - றிந்நகரிற் [ஞ
போந்தவிற்கின் றேனென் பொருளுடையீர் கொண்மினெ
வாக்தெருவிற் சென்றா னறைந்து. (௯)

என்னை விலைவிவர்கட் கென்றுமறை யோனொருவன்
முன்னணைந்து கேட்டான் முடிவேந்தன் - வன்னெடுங்கை
யானைமிசை நின்றெறியு மக்கவண்கற் போமளவுக்
கானபொரு ளென்றிசைத் தானுங்கு. (௧௦)

அந்த விருத்தியை யாரிடத்தே யீவதெனச்
சந்தமறை யோன்வினவத் தாரிறைவ - னிந்தமகன்
கையிலளிக் கென்றுணர்த்தக் காப்பியனுங் கன்றோனுங்
கையறைந்தா னீவலென்று காண். (௧௧)

உன்காத்தே மா[illegible]ிய முற்றதோ வென்றரசன்
மின்கவியைப் பார்த்துரைத்தான் வெள்ளியும்பொன் - னொன்க
சேர்ந்ததநீ நிட்டுமுறிச் சிட்டடென்செய் மாநிவனை [ரத்தே
யீந்திடுவெவ் வந்தணர்க்கென் றான். (௧௨)

அந்தவனை மாநிலமன் னுற்றவடி தாழ்ந்தரிவை
யெர்தமக்கு நெஞ்சழுங்க லேந்தலினி - யெந்தநா
ளின்வதனங் காண்குவனோ நீவிடைதா வென்றகன்றான்
மின்விழிநீர் சிந்தி மிக. (௧௩)

அங்கண்மா ஞால வரும்பொறையைத் தாங்கலனாய்ப்
புங்கவன்றான் வைத்தீண்டுப் போந்தவெனக் - குங்களைமேற்
றுங்கலெவ்வன் கூடுமென்று தாயெனையு நீத்தனையோ
பூங்கழற்கா லையா புகல். (௧௪)

என்றுசுதன் வேந்த னெழிற்களத்தைப் பூண்டரற்றக்
கன்றினைத் தீத்தெறிப்பக் கண்டுவினைக் - கொன்றுகரம்
பற்றியிழுத் தேகொடுபோய்ப் பார்ப்பான் றனதகத்தை
யுற்றணன்யாய் செல்ல வுடன். (௧௫)

அக்கொடுமை பார்த்தரச னூற்றலனாய் மூர்ச்சித்துச்
சக்கரமேன் மூழ்கிவிழத் தாங்கியுடன் - மிக்கமதி
மந்திரிதான் றேற்றலுமே மன்னவனு முட்கவலை
சிந்தி யெழுந்தான் றெளிந்து. (௧௬)

பின்மிருத சஞ்சி வினிப்பேர் மனுப்பெற்றான்
மன்முகத்தை நோக்கி மறைமுனிக்குச் - சொன்னபொரு
ளீந்தனைநின் பின்னுமுன்ற வென்றனக்குக் கூலியினி
வேந்ததரு கென்றான் விளித்து. (௧௭)

நல்குவன்வா வென்று நவின்றமைச்சற் பார்த்தென்னை
வில்கொடுநீ பொன்னிந்த வேதியற்கென் - றொல்கவில்சீர்
வேந்துனைப்ப நாயேனை விற்றளிபொன் னென்றன்னோன்
வீழ்ந்துரைத்தான் வள்ளலடி மேல். (௧௮)

அன்னவகை செய்யி னருந்தவற்கஃ தேலாவா [தான்
வின்னினியே யென்னைவிற்றீ பொன்னென்று-மன்னிசைத்
கேட்டென்ன பாவங் கெழுமியதெற் கென்றுள்ளி
வாட்டமுற்று மந்திரியு மன். (௧௯)

ஆலவய லோங்குபழை யாறையமர் நீதிதன்னைப்
போலுமரிச் சந்திரன்றன் பொன்முடியின் - மேலொருபுல்
வைத்தென்ன ராயிடினும் வள்ளலிவற் கொள்ளுமொழி
கைத்தென்றன் கைக்கணளித் தென்று. (௨௦)

போகு மறுகுதொறும் போய்ப்பகர வோர்வீர
வாகுவெனும் பேர்ப்புலைஞன் வள்ளூரம் - வாகுவனீற்
காவினன்முன் வந்தெய்திக் காவிறக்கி வாய்புதைத்து
நீவியங்கை யாலொடுக்கி நின்று. (௨௧)

ஐயே புலைத்தொழிலை யாற்றிடுமென் போல்வார்க்கு
மெய்யேசொல் விற்கத் தகுதியுண்டே - கையீந்தா
னீகருதிக் கேட்கு நிதியமெலா மின்றென்று
தாகமொடு கேட்டான்முன் றாழ்ந்து. (௨௨)

மன்னனுட்டம் பாடுகொண்டு மந்திரிவிற் பேனுனக்கிங்
கென்னவிலை யேதென்றா னக்கொலைஞன் - மின்னுபதி
னாயிரம்பொன் னென்றமைச்ச னுடனுமற் றன்னோனுந்
ஆயஃ திவலென்றான் சூழ்ந்து. (௨௩)

மந்திரிதன் பேரால் வரைந்தா வணமவற்குத்
தந்து பொருள்வாங்கித் தானவர்தம் - மந்திரிக்கிந்
னைதயர் போய்வருக வென்றறைய வாங்குமகிழ்க்
னைதயெனவே போனா னவன். (௨௪)

வாய்மை விதரணத்தின் மற்றொருவர் நேரில்லாத்
தூய்மனத்துத் தோன்ற றிணையடியைப் - பாய்மலர்க்க
ணீராட்டி யின்றோடு மெற்கிறைவ னின்பணிசெய்
பேராட்சி பேர்க்கதுவோ வென்று. (௨௫)

சாற்றி யரற்றிநின்ற சத்தியகீர்த் திப்பெயரோற்
றேற்றிவிடை நல்கிச் செழுமறையா - ராம்றமிரு
மூனிட்ட காவை யுலம்பொருநின் டோணமீதிற்
றுனிட்டுத் தன்விதியை யோர்ந்து. (௨௬)

புன்றெறியிற்சண் டாளவருப் பூண்ட தறுகண மர்
பின்றொடர்ந்து பீடில் புலைச்சேரி - துன்றியவன்
றங்குமுடை நாறுந் தனிக்குடிலைச் சார்ந்தகமை
யன்றிறக்கி யீந்துகின்றா னால். (௨௭)

ஆங்கம் மறவி யரசனைப்பார்த் தேமர்தே
பாங்கிற் பிணஞ்சுடற்குக் காற்பணமு - மோங்குகொள்ளி
யாடையுந் தாங்கி யளித்தெனக்கு வாய்க்கரிசி
வாடலின்றி யட்டென்கி வாழ். (௨௮)

என்றியம்பி னானக வேந்தலரிச் சந்திரனு
நன்றெனவே வெஞ்சுடலை நண்ணியவட் - பொன்றினர்மெய்
கொண்டெரிந்த பாடைக் கொடுங்கழியாற் கொட்டிலொன்று
கண்டுபுக்குச் சொன்னபணங் கால். (௨௯)

வெய்யகொள்ளி யாடை வெறுந்துரியோர் பால்வாங்கி
யையகொள்ளன் றுண்டாற் களித்தவைவாய்ப் - பெய்யரிசி
புட்டியின்கண் வைத்திட்டி முன்பிணங்கொண்டேபோட்ட
கட்டிலின்க ணிற்றிருக்குங் கால். (௩௦)

அந்நகரோ ரம்பலத்தில் யாமினியந் நித்தேதன்
மன்னவனைத் தேடி மதியமைச்சன் - றுன்னியிடு
காட்டிற் சிறுகுடிலிற் கண்டிறையை யேங்கிமனம்
வாட்டமுற்று வீழ்ந்தலற மண். (௯௧)

நன்றாங்கா னல்லவாக் கண்டு நகர்ந்தயா
மன்றாங்கா லல்லற் படலாமோ - வின்றாட்டாய்
தேர்ச்சித் துணைவவெனத் தேற்றியவன் கைக்களித்தான்
வாய்ச்ச வரிசிதனை மற்று. (௯௨)

மற்றதனை மந்திரிமா மன்னனடி தாழ்ந்தேற்றுப்
பெற்றமதற் குப்புல்லிற் பெட்பினல்கிப் - பிற்றைமயத்
தோடுவிழுந் தண்டுலத்தை யுற்றெடுத்துக் குத்தியட்டுப்
போடவிறை நின்றான் புசித்து. (௯௩)

காசிகாண்டம் முற்றிற்று. ஆ. ௪௧௧.

---

## மயானகாண்டம்.

---

பின்னடிமை கொண்ட பிராமணனும் வன்கணனிற்
றுன்னியசெய் மாதிவருட் டோகையன்னாள் - பன்னுமல
கிட்டு மனைமெழுக னெற்குத்த லெப்பணியுந்
திட்டமுறச் செய்தொழுகத் தேர்ந்து. (௧)

கோமகனுங் கோலஞ்சித் தூக்கமொழிந் தேவிடியச்
சாமமெனத் தானெழுந்து போய்வனத்தி - லோமவிற [து
கிந்தனம்பைங் கூர்ச்சமிவை கொய்தெடுத்துக் கொண்டணைந்
தந்திடுங்கூ ழுண்டுதரித் தான். (௨)

உற்றசிறு ரோடொருநாட் போய்த்தேவ தாசனெனுங்
கொற்றவன்சேய் கானங் குறுகியவண் - வற்றுதவர்
கட்டிச் சுமந்து திரும்பிவருங் காற்கண்டு
வட்டைக்கோர் பால்வன் குசை. (௩)

கொய்யவது தன்கமையைக் கோளியின்கீழ் வைத்திரக்கி
யையெனப்போ யாங்குப் பறித்திடலும் - வெய்யமுனி
கற்பனையால் வந்து புதர்க்கட் கரந்துறைந்த
சர்ப்பங் கடித்தபடக் தாழ்ந்து. (௪)

அக்கணமே மாய்ந்தா னலறிவெரீஇ வீழ்ந்திளைஞன்
சக்கரமார் பொற்றேர்த் தரணிகண்டு - துக்கமொடு
பாய்ந்தோடும் பச்சைப் பரிசெலுத்திப் போய்க்குடபான்
மாய்ந்தான் மறிகடற்குள் வீழ்ந்து. (௫)

நந்த மெலுவனின்ன நன்னுமைக் கேதவென்னென்
றந்தவடக் கிழமர்ந்த மக்களெலா - முந்தியவன்
சென்றதிசை சென்றிறந்து நிற்பப் புரட்டினர்பார்த்
தொன்றிகனி செல்ல லுளத்து. (௬)

மீண்டங்குத் தத்தம் விறகெடுத்துக் கொண்டொல்லை
மாண்டகர் மாலையொடு புக்குமகற் - றேண்டிநின்ற
தாயுடனன் னுன்மடிந்த தன்மையிட னன்கறைந்து
போயினர்தம் மில்லம் புரிந்து. (௭)

ஆயிழையாள் கேட்டழுங்கி யவ்வுரையை மெய்ம்மறந்து
வாயிலிடை வீழ்ந்தெழுந்தங் குன்மருவி - யேயபணி
யாவு மறவியற்றி யாளுடைய பூசுரன்றன்
சேவடிமுன் சென்று விழுந்து. (௮)

நாகத்தான் மாண்டொழிந்தா னுன்பெற்ற வோர்குமா
னோத்தா வாங்குவிடை யென்றழலும் - வேகத்தாற்
சிறிமறை யோனடிமை செத்தானிற் கேனட்டஞ்
சேறலொழி தேமொழிநீ யென்று. (௯)

சொற்றனன்கேட் டொண்ணுதலா டோன்றலிறந் தானென்
பெற்றவயின் பேயேற் கெரியாதோ - சற்றிரங்கி [ரும்
நல்குவிடை போயெடுத்து நானடக்கஞ் செய்திங்கே
யெல்வருமுன் னெய்துவனென் றாள். (௧௦)

நின்மொழிதப் பாண்மைசடப் பா யெனினீ யேகென்று
சன்மனனைந் தன்னோன் கழறுமே - மின்மருங்குற்
காரிகைதன் கால்பின்னக் கார்க்குழல்கண் ணீருடனே
சோரவுள முந்தத் துலைந்து. (௧௧)

சுற்றநகர் தாண்டிமசார் சுட்டி யுளாத்துழிபோ
யுற்றலகை யோரிகுறள் சூழநடப் - பெற்றமகற்
கண்டு கணையெறிமான் போலிறகி மெய்ம்மறந்து
மண்டலமேன் மாழ்கிவிழுந் தாள். (௧௨)

பின்னெழுந்து பேதை பெருங்கயற்க ணீராட்டிப்
பொன்னலர்க்கை யாலெடுத்துப் புத்திரனை - தன்னவுடைட்
தங்குமடி மேல்வைத்தே சாதகம்பே யும்மிரங்கச்
செங்குமுத வாயைத் திறந்து. (௧௩)

இந்திடத்தின் மாசுணத்தா னீகடியுண் டேயிறப்ப
முந்துவினை யாது முன்றறியே - மைந்தாவோ
வென்னிறையு யானுமினி யாரைநம்பி வாழ்வமுரை
யென்ன வரற்றி யிசைத்து. (௧௪)

தன்னமைத்தோள் மீதிற் றனிமகனை வைத்துக்கொண்
டன்னத்தின் றாவி யனிச்சமஞ்சும் - பொன்னடிக்கட்
கன்முள் ளுறுத்தக் கணங்குறள்செந் நாயடர்ப்பப்
புன்முடைநா றீமம் புகுந்து. (௧௫)

வானவர்தங் காப்பின் மகனைவைத்தே கிச்சரிந்து
போனகுறைக் கட்டை பொறுக்கிவந்து - தானடுக்கிச்
செங்கனலே மூட்டிச் சிறுவனையக் கட்டையின்மே
லங்கெடுத்து வைத்தா ளழுது. (௧௬)

நண்டு கனல்விளக்கங் காவலவன் சார்ந்தேடி
மண்டிருளில் வந்துதனி வாய்க்கரிசி - தண்டறவை
காற்பணநல் காதே சவஞ்சுடலே னென்றெறிந்தான்
வாட்கொட்டடாக் கன்முளையைக் காய்ந்து. (௧௭)

சேவடிமேல் வீழ்ந்து தெரியாதிவ் வூர்வழக்கம்
பாவியெனக் கேது பணம்வழங்கத் - தாவிலருட்
கண்ணவர வான்மடிந்த காதலனை யான்றகனம்
பண்ணவரு தென்றான் பதைத்து. (௧௮)

செந்திருவே நீண்டவெ லினை யான்புலையற் கோரடிமை
தந்தமுழத் தானைபணங் காலாண்டாற் - கிந்நிலை
நின்மகனை நீசுடுக வெற்குரிய வாய்க்கரிசி
மன்னவிவன் காணென்றான் மன். (௧௯)

காசுக் கிம்புறனே ளுயினிவ னிம்மகனைப்
பாசுறழ்தோ ளேற்றிப் படர்ந்தகா - லேசெனவே
யென்னுது செய்குவனே வென்றிரந்தாள் கோதைகழுத்
தொன்னுனைக் கண்டான்கோ னுற்று. (௨௦)

வஞ்சி நினது விளமிடற்றின் மங்கலநாண்
கெஞ்சித் தலங்கப் பொருள்காத்திற்- கொஞ்சமுமில்
லென்றிசைத்த வேலா விதனையெனக் கீதியென்றான்
குன்றிசைக்குந் தோளரின் குறித்து. (௨௧)

வார்முரசங் கேட்டகண மான மடப்பிடிதான்
டார்மிசைவீழ்ந் தேபதைத்திங் கென்கணவ - னொருவர்க்
கல்லதமற் றியார்க்கு மறிவருகா ணிவ்விழிநு
ளெல்லுமதோ கண்டான னுற்று. (௨௨)

இத்தலத்தே புக்கபின்னை யெம்பெருமா னுர்மொழியும்
பொய்த்த நவோ மாயோன்புராரியினு - மெய்த்தவனோ
டல்லனின்றென் வாடரிய கற்பொழிவ தென்னென்று
சொல்லிச் சொரிந்தனள்கண் முத்து. (௨௩)

வாய்மை யதுவினவி மன்னன் மனமறுகிச்
செய்முகக்கைப் பார்த்தெங்கிச் செறியரா - காய்கடித்த
போதனையும் பூவையையும் விற்றகொடி யேனைநொந்தென்
னோநினையல் புற்றசெல்வா வோ. (௨௪)

அன்றெனது கந்தரத்தை யார்வமொடு பூண்டழகீ
தூன்றுசின வேதியன்கை தொட்டீர்ப்ப - நின்றிருந்தேன்
பாவையுனைத் தோட்கொணர்ந்து பாலகனை நீச்சுடலும்
பாவியின்று காலெறிந்தேன் பார்த்து. (௨௫)

வென்றிவடி வேற்றுறை வெட்டியாற் காட்பட்டா
னென்றமினி யெய்திநமை மீட்கவல்லா - னென்றெணியோ
வாருயிரை நீத்திட்டா யப்பாவோ வென்றரற்றிப்
பாரகத்தே வீழ்ந்தான் பதைத்து. (௨௬)

கொண்கனிவ னுமென்று கோதைதுணிந் தேர்தலடித்
தண்கமலந் தாழ்ந்துதலை வாபுவியின் - கண்ணெவர்க்குந்
தெய்வம் வருத்ததல்லாற் சோராது வேறினிநீ
னையலற மூன்னென்று ணைந்து. (௨௭)

நீசனுக்கி யான்றொழும்ப னிலவிழி யாயவற்குத்
தாசுபண நல்கேனேற் றுன்னுநவை - நீசடிதி
போந்துனையாள் வோற்குப் புகன்றடைபொன் வாகிவந்தெற்
கீந்துசுடென் மைந்தனையென் றான். (௨௮)

வன்பா னிகர்த்த மனத்தனிப்பொன் னேடுடையை
யன்பாற் கொடாஅ னறக்கொடியோன் - றன்போவி
யிம்மகளைப் யார்த்திருத்தி யேகியளித் தாற்கொணர்வல்
செம்மலிவ னென்று தெரித்து. (௨௯)

தாரணிமா மன்னன் றனயனைய னின்றழுங்க
நேரிழையாள் வெஞ்சுடலை நீத்தொல்லைக் - காரியலுங்
கன்மதில்சூழ் காசி கடிநகரி வாய்நுழைந்து
பொன்மனையார் வீதியிடைப் புக்கு. (௩௦)

ஆங்க ணுவளகத்தே யண்மிச் சிலபடிறர்
பாங்கி னெடுத்துப் படர்ந்தபுறங் - காங்களவிற்
காசணிகள் கைக்கொண்டு காதியெறிந்திட்ட
காசியிறை கான்முளையைக் கண்டு. (௩௧)

இம்மதலை யார்மதலை யென்னவல மந்தகனை
யெம்மதலை தன்னை யெறிந்ததுகொ - லம்மவெனு
வாடுற்றுச் சேயை வனசமலர்க் கையேந்தி
நாடுற்றான் மெய்க்குறியை நன்கு. (௧௨)

விடிந்திடுமு னவ்வூர் விறற்கா வலர்க
ளிடிந்தமதி லேறி யிழிந்தாங்- கடைந்திறைவன்
செத்தமக வோடு தெரிவைதனைக் கண்ணுற்று
மொத்துபுகை யார்த்து முனிந்து. (௧௩)

மண்டபத்தில் வீற்றிருக்கு மாமகுட மன்னவன்முன்
கொண்டுவிட்டுக் கும்பிட்டுக் கொற்றவனே - கண்டிரவுன்
மைந்தனையிம் மாது மறுகெடுத்துக் கொண்டிருக்கத்
தந்தனமீண் டென்றிசைத்தார் தாழ்ந்து. (௧௪)

அந்தமொழி கேட்டரச னங்கை யமைத்தவளை
வந்தபடி யாவுமுரை வல்லியெனச் - சந்த்ரமதிப்
பேர்த்தெரிவை தாளைப் பெருமலர்க்க ணீரருவி
வார்த்தலம்ப கின்றிறைஞ்சி மற்று. (௧௫)

என்று நரனை யெடுத்தருந்து மோரரக்கி
வென்றிவடி வேலிறைவ நின்னகர்வக் - தின்றிரவிற்
றின்றிடயா னின்மகனைத் தேர்ந்து புறங்கொடுபோய்க்
கொன்றனன்கா ணென்றாள் குழைந்து. (௧௬)

இன்னற் கடல்கடப்பா னேந்திழையா ளோர்ந்துளத்துச்
சொன்னமொழி கேட்டுத் துணைவரைப்பார்த் - தந்நிருபன்
செய்ய முகத்திவளே செல்வனைக்கொன் றாளென்று
மையமெனக் கில்லென்றா னுய்ந்து. (௧௭)

அந்த நிலைக்கணரிவைகரம் யாத்திர்த்து
வந்தவர்கண் மன்னு மதனையெடுத் - தந்தடிப்பின்
சென்றிச் சேரடியள் செருப்பக்கண் டீர்த்தணைந்தே
மீன்றுயிர்சரம் விட்டிடினென் றார். (௧௮)

சொன்னவடி தானிச் சுரிகுழலா டன்னடியோ
பின்னை யெவரடியோ பேர்ந்தோடி - யின்னொடிக்க
ணோக்கி யணைதிறொரு நோன்கழற்கால் காசியர்கோன்
போக்கினன்சில் லோளைப் புகன்று. (௩௯)

போற்றி யிறையடியைப் போந்தவர்க ளந்நெறிக்கண்
மாற்றி மறைமுனிவன் நீட்டிவைத்த - கோற்றொடியா
டன்னடியே கண்டோடித் தாழ்ந்திவள்கால் வைப்பல்லான்
மன்னவிலை மற்றடியென் றார். (௪௦)

சொல்லுதிர் யுண்மையெனத் தோகைமுகந் தானோக்கிக்
கல்லுறழ்தோள் வேந்தன் கழறவெனை - யல்லதிலை
கள்ளி யெனவறைந்தாள் காவலன்கே ளாவியந்தே
யுள்ளங் கசிந்தா னுற. (௪௧)

அந்நிலையிற் கங்கு லருந்தவன்செய் மாயமொடு
மன்னனரிச் சந்திரன்றன் வல்வினையு - மன்னிரிய
மங்கையின்கைக் கட்டுடனே வாரிசத்தின் கட்டவிழச்
செங்கதிரோன் வந்தனன்கீழ்த் திக்கு. (௪௨)

புத்திரனை யந்தப் புரங்கொடுபோ மாறிசைத்து
முந்தை விதிப்பயனை முன்னிமுன்னி - மெத்தநொந்து
மாசிலாக் கற்புடைய மானைவதை செய்விப்பான்
காசிபதி யெய்ந்து கருத்து. (௪௩)

தூதுவரைக் கொண்டழைத்துத் தொல்வீர வாகுவெனுங்
காதகனைக் கண்டிந்தக் கள்ளிதனைக் - காதுகநீ
கட்டுடனே கொண்டேகி காய்களத்தி லின்றென்று
கட்டளைசெய் திட்டான் கவன்று. (௪௪)

கோள்வீர வாகுக் கொலைஞன் குரிசிலினைத்
தாள்வீழ்ந்து போற்றித் தளரணங்கைத் - தோள்வீக்குந்
திண்கயிற்றாற் பற்றித் திரும்பிப் புலைச்சேரிக்
கொண்குடிசை தன்னையடைந் தற்று. (௪௫)

தன்றொழும்ப னானவரிச் சந்திரற்கூய் மன்மகனைக்
கொன்றவிந்தக் கள்ளியைநீ கொண்டேகு - யின்றெறிக
வென்ன விளம்பிடியோ டந்தா னவன்கரத்தே
மின்னுநன்கை வாளை விதித்து. (௪௬)

வாளுடனே மாதை மலர்க்கரத்திற் கொண்டிறைவேய்த்
தோளியைத்தான் பார்த்தழுங்கத்தோகைகண்டு-வேளையா
யென்பொருட்டு நீயிரங்க லென்றாள்கோன் பின்றொடர்ந்தா
னன்பமைச்சன் வந்திறைஞ்சி யாங்கு. (௪௭)

பின்னர்த் திரண்டு சனங்கள்பல பேசிவரக்
கன்னிகைதோள் யாத்த கயிறுபற்றி - மன்னவர்கோன்
வன்னமணித் தோரணநீள் வாயிகந்து வந்திருந்தான்
பொன்னகரி னுச்சிப் புறத்து. (௪௮)

வண்டமர்தார் வள்ளலுக்கு வஞ்சமனக் கௌசிகன்றான்
கண்ட விடர்முடிவு காண்பதற்கன் - றண்டரொடு
வாசவனை நாரதனை மாவசிட்டன் கூட்டிக்கொண்
டாசினிக்கண் வந்துறைந்தா னால். (௪௯)

வந்தவிசு வாமித் திரமுனிவன் மன்னனெதிர்
தந்திலன்யா னுனைக்கென் றேசாற்றி - யுய்ந்தரசு
மிவ்வுயிரு நீபெறுக வென்னவவன் றாள்பரவி
நவ்விவிழி யோடரச னைந்து. (௫௦)

ஒழுக்க முடையாரிங் கூற்றுக்கோ லன்ன
விழுக்க முடையார்க் கிசைப்ப - வழுக்கியுந்தம்
வாயினாற் றீய வழங்குபவோ பொய்யியம்ப
நீயெழுக்குச் சொல்லுவதென் னேர்ந்து. (௫௧)

சேய்ண்மையுடன் சேறலினா னற்றனைவ னெவ்வொளிக்கும்
போயொழியா வெவ்விருளைப் போக்குதலாற் - பாயவொளி
செம்பொருளைக் காட்டுதலாற் றேசிகன்மெய் யாதுஞ்சொன்
னம்பி யதனைவிடே னாம். (௫௨)

நில்லாத யாக்கையையு நீளரசின் வாழ்வினையு
மெல்லா நிலையினவென் றெண்ணியிசைக் - கொல்லாத
வெய்ய நரகத்தே வீழ்விக்கும் பாவத்தைச்
செய்யத் துணியலம்யாந் தேர். (௫௩)

என்ன முகம்புலர்ந்து மாய்ந்திருடி யேகினன்கூ
யன்னவனை மாணி யறைந்ததிற - மிந்நிலைக்கட்
கண்டகல்க வென்றனைப்பக் காதிமக னுமுட
னண்டியவ னோடமர்ந்தா னங்கு. (௫௪)

பேலதகைந்நாண் பற்றிப் பிணஞ்சுடுகோ லாற்றள்ளித்
தாதவிழ்தார்க் கோசலர்கோன் றன்னிறந்த - காதலனண்
ணத்தலமுற் றுன்றெய்வ மன்பிணினைந் தேத்தியிரு
நெய்த்தருழல் பூர்வமுக நின்று. (௫௫)

என்றறையத் தெய்வந் தொழாஅ ளிதயத்தி
னன்றுபராய் நாயகனை நன்னுலதா - ளின்றெனியே
னுவியிறப் பஞ்சி யறம்வழுவல் வாழியெனுக்
காவலனைத் தேற்றிநின்றாள் கண்டு. (௫௬)

நின்மலனாய்ப் பூரணனாய் நித்தியனாஞ் சிற்பரனாற்
பன்மறையின் பல்லறந்துண் மிக்கவுன்னலம் - நன்னெறிக்க
ணின்றனனே னுண்டே னிறையிவண்மாட் டிறின்மை
யொன்றுகெனு வீசினனெள் வாள். (௫௭)

மாசடையா நெஞ்சத்து மன்னன் கரத்தெடுத்து
வீசியவவ் வெள்ளயில்வாள் வீழ்ந்தன்று - மூசரிக்கு
நற்பிரசம் வாக்கு நறுமலர்த்தார் போலவசையாக்
கற்புடைய நங்கை களத்து. (௫௮)

---

மயானகாண்டம் முற்றிற்று. ஆ ௪௭௭.

---

## மீட்சிக்காண்டம்.

அங்கண் விசும்பி னடலரவ முண்டெழுந்
திங்களென்னத் தேவி திகழ்ந்தனளாற் - றுங்கமுனி
மாயப் பெருநெருப்பின் மன்னினன்மா மன்னவர்கோன்
றூயொளிய பொன்னிற் சுடர்ந்து. (க)

வானிற் றிரண்முன்னோ ரோடு மறைவசிட்ட
னுணர்ந்த மாடி யவனியுற்றான் - கோனின்று
நன்மையுற்றா னென்னினென்று நக்கியம்பி யாடினனுங்
கன்மனத்துக் கௌசிகனுங் கண்டு. (உ)

மாயவன்முற் றேவர்களு மன்னு கணத்தவருங்
காயுமிப மாமுகனுங் காங்கெயனும் - பாயபுடை
சன்னமலை மாதுடனே நம்பனர வெள்விடைமே
லன்னலெதிர் வந்தா னமர்ந்து. (ந)

கண்டுவிழி நீர்பொழியக் காவலர்கோன் றேவியுட
னண்டர் பிரானை யனைக்குடனே - தண்டெனமண் [ளத்
வீழ்ந்திறைஞ்சி யேத்தியபின் வெவ்விடர்நீத் தின்பவெள்
தாழ்ந்தவச னுய்நின்றா னாங்கு. (ச)

அப்பூதி நற்புதல்வ னன்றெழுந்த வாறேபோற்
றப்போதா வள்ளலரிச் சந்திரன்சேய் - தப்போதி
விசயிற்கை யேள்விளிப்ப வீழ்ந்தெழுந்து தாள்பணிந்தான்
காசியர்கோன் மைந்தனொடு கண்டு. (ரு)

பால னுயிர்த்தெழுதல் பார்த்தங் கயோத்தியர்மன்
பாலிகழுந் திங்குதலைப் பாவையன்னாள் - சாலியயல்
சூழ்ந்திலங்குங் காசிபதி சூழ்ச்சித் துணைவனன்பாற்
றாழ்ந்திசைத்தார் சங்கரனற் றான். (சு)

ஆயபொழு தெம்மா னழைத்தமுனி கௌசிகனை
நீயிறைவற் கூறு நிகழ்த்துவகை - யேயதிற
னிந்நிலையா ரெல்லா மினிதுணா வின்றெடுத்துப்
பன்னுகென வாய்மலர்ந்தான் பார்த்து. (எ)

கோசிகனெஞ் சுட்கிக் குறுமதியச் செஞ்சடையான்
வாசமலர்த் தாள்வணங்கி வாழ்த்திநின்று - வாசவன்முன்
மாவசிட்டன் வாய்மொழிக்குத் தான்மாருச் சொற்றமுதல்
யாவையுஞ்சொற் றனங் கெடுத்து. (௮)

பின்னமலன் பேதாய் பெரிதிழைத்துந் தீங்கிறைக்கு
நின்னெணமுற் றுயிலையே நீமனத்து-ளுன்னிநனி
வென்றியையார் தோல்வியையார் மேயினர்க ளீண்டுநோக்க
வென்றியம்ப வெய்தியகத் திடு. (௯)

விச்சுவா மித்திரப்பேர் மேயமுனி வீழ்ந்திறைஞ்சி
நச்சுவாய்ப் பாம்பணிந்த நாயகனே - பிச்சனே
னண்ணலரிச் சந்திரன்ற னுசில் குணஞ்செயலை
யெண்ணியறி யாதிகழ்ந்தே னேற்று. (௧௦)

வேத முணர்வசிட்டன் வென்றவன்யான் றோற்றவனென்
மாதவத்திற் பாதி மகிழ்ந்தரசற் - கிதனுட
னன்றவனெற் கீந்த வரசுரிமை யாவுமவற்
கின்றளித்தல் செய்தனனென் றான். (௧௧)

காய்ச்சியபொன் னுணியினைக் கன்னத்தி லிட்டாங்குப்
பேச்சதனைக் கேட்டுப் பெரிதுருகி - மாச்சுரும்பார்
தாரதிப னேற்றோர்க்குத் தந்ததுபின் வாங்கிவிழை
வாரளற்றி லந்தணவென் றான். (௧௨)

பார்த்திவகேள் யானே படர்ந்தபடர்ந் தாக்கூதவுஞ்
சீர்த்தவமே விட்டேன் செழுநிலத்தைக் - காத்தமர்வேன்
மான்வசிட்ட னேர்நோத்த வஞ்சினைத்தா னுன்முறைமை
யான்மதித்துச் சோதித்தே னீண்டு. (௧௩)

ஆனுகநின் னுடைன் றருந்தவத்தோன் சொற்றலுங்கோ
னுளிழிருற் சாயீமங் காத்திருந்தேன் - காணேயோ
மாதைமறை யோருவிற்று மாநிலமேல் யானுர்
னீதுயன்று நீயாள்கென் றான். (௧௪)

அந்தவுரை கேட்டனுமி யங்கியரன் முன்பிறைஞ்சி
மைந்தனையு மங்கையையு மெற்குவிற்ற - னிந்தனையோ
காவலவன் னோர்பொருட்டுக் காசினித்தே வாய்க்கொண்ட
வாவணமீ தென்றிட்டா னங்கு. (௧௫)

சாலனுமக் காலமலன் காலணைந்து தாழ்ந்தேத்திக்
கோலமுடி வேந்தைக் குறித்திவணி - சீலமிலா
நீசனுக்கா ளாவையென்று நீசனாய்த் தோன்றியுனை
யாசறக்கொண் டேன்முறியீ தாம். (௧௬)

நீயிருந்து காத்த நெடியகடு காட்டனைத்தும்
பாயமகச் சாலையே பாரென்ன - வீயுடலைத்
திக்குமிடஞ் சொன்ன திறந்திகழக் கண்டடைந்தான்
வீக்குகழற் காலோன் வியப்பு. (௧௭)

செம்மலைக்கண் டன்பாற் றிகழுமயோத் திப்பதிசேர்ந்
திம்முனிவ னோர்தவமு மேற்றுண்டு - செம்மைமுடி
தாங்கி யெமதுபதஞ் சார்கவந்தத் தென்றிறைபின்
பாங்கின் வலாரிமுகம் பார்த்து. (௧௮)

நீயு முனிவரு நீள்கா சியர்பதியும்
வாயிலயோத் திப்பதியிம் மன்னனுடன் - போயிவற்கு
மாமகுடஞ் சூட்டி மகிழ்ந்துறையுள் சேர்கவெனா
வாய்மலர்ந்து போனான் மறைந்து. (௧௯)

சொற்றபணி தாழ்ந்து சுடர்முடிக்கட் கொண்டுநின்றார்
கற்றடிவேற் கைம்மகவான் முன்னோர்கள் - மற்றைக்
கடவுளர்தஞ் சார்பு கலந்தனர்போ யந்தச்
சுடலை யகன்று துனைந்து. (௨௦)

கூர்த்தவிரு ணீக்குதலுங் கோபதிமா யோகியர்சொல்
வார்த்தை மறுப்பஞ்சிக் காசியர்மன் - னேர்ந்தகொடித்
தேரிவர்ந்து கோசலர்கோன் றேவிசுத னோடமைச்சன்
சாரவவர் தாமுமுட னார்ந்து. (௨௧)

காசிபதி சேனை கருங்கடல்போன் முன்னடப்பத்
தூசிகுடை யாதபத்தாந் துன்பமற - மூசியெழ
வார்முரச மார்ப்ப வளநகரை நீத்தணைந்தான்
வாரணவா சிக்கரையின் வாய். (௨௨)

அந்நதிநீ ராடி யகன்றங் கனைவருடன்
றென்ன யமுனை சிவணியதி - னன்னரும
மூழ்கித் தணந்து முதிர்பவத்தின் மூலத்தைப்
போழ்கங் கையையடுத்தான் போந்து. (௨௩)

சேர்ந்து விதியுளியத் தீர்த்தத்திற் றோய்ந்திறைவன்
றீர்ந்திந் திரன்முதலோ ரோடுதில்லம் - வார்ந்தகிரி
மண்டு தடம்பலவு மற்றிகந்து கோமதியின்
வண்ட லிடையிறுத்தான் வந்து. (௨௪)

கூட்டிக் கொடுபதியைக் கோவணனுங் குற்றநிறங்
கேட்டுவகை பூத்துக் கிளர்கடற்பா - லோட்ட நதி
போலனையர் தானை புரசனங்கள் போந்திறையைக்
காலிறைஞ்சி வீழ்ந்துநின்றார் கண்டு. (௨௫)

பொன்னகர்க்கோ னுறியரும் போதவிரு சேனையுட
னந்நதிவிட் டேகி யயோத்திநகர் - மன்னவன்பொற்
கோயில் குறுகிக் கொடித்தே ரிழிந்துபுக்கான்
பாயமணி மண்டபத்தின் பால். (௨௬)

வாய்மையரிச் சந்திரனை மாமகுட மைந்தவித்தோர்
வாய்மலர்ந்து வாழ்த்தெடுப்ப வாசவன்றன் - சேயமலர்க்
கையெடுத்துச் சூட்டிக் கரைந்தாசி போய்ப்புகுந்தா
னையவம ராவதிக்க ணங்கு. (௨௭)

ஆசியுரைத் தந்தணரு மாங்ககலக் காதிமகன்
கோசலர்கோ மானை கொடுத்தனன்கொண் - மாசிலனக்
கென்றவத்திற் பாதி யெனவுதக மங்கையெடுத்
தன்றெவருங் காண வளித்து. (௨௮)

யானறியா தன்னை யிகழ்ந்தவெலா நீபொறுப்பாய்
மோன வெனுஅ முனிவசிட்டற் - கானுவுரை
சொற்றிறையைத் தேற்றிமகன் றேகையொடு மந்திரியை
யுற்றனன்கான் வாழ்த்தி யுவந்து. (௨௯)

மின்னு மணிக்கவரி வீசவரிச் சந்திரன்பின்
பொன்னணைமேல் வீற்றிருப்பப் பூமகன்செய்-தன்னைமற
மந்தணர்க்கு மாமோ வெனப்பரவிக் கேட்டனன்றற்
கொந்தவிழ்தார்க் காசியர்தங் கோன். (௩௰)

தோய நிலத்தியல்பாங் தொல்குணமே கௌசிகனுக்
காயதென மாவசிட்ட னங்கறைய - நீயெனக்கோ
தன்னன் வரலாறென் றன்னலடி தாழ்ந்துரைப்பச்
சொன்னன் முனிவனிது சூழ்ந்து. (௩௧)

மீட்சிக்காண்டம் முற்றிற்று. ஆ. ௫௰௮.

---

## உத்தரகாண்டம்.

---

கன்னல் வயலுடுத்த காசிபதி நீகேட்டி
பொன்னலர்வாழ் வோன்மரபிற் போந்தகுசன் - றன்னெழு
லைமந்தன் குசற்குக் கிரிவிரிச மாநாடு [வாய்
தந்துகுச நாபற்குத் தான். (௧)

செந்நெலுயர் கௌசாம்பித் தேயம் வதூர்த்தனுக்குத்
தன்னிகரில் வாரணமுந் தார்வசுவுக் - கன்னமமர்ந்
தார்வனசம் பொய்கைக் கலரும் வசுமதியு
மார்வமுட னேயளித்தா னல். (௨)

அங்கவரிற் கௌசாம்பி யான்குசநா பற்குதித்த
மங்கையர்நூற் றுவரோர் வாசமலர்ப் - பொங்கரகத்
தாடச் சமீரணன்கண் டாயிழையீ ரெற்குநலங்
கூடிக் கொடுத்திரென்றான் கூர்ந்து. (௩)

எங்கள் பிதாவறிய வெம்மை மணம்புரிந்தா
லங்குனைச்சேர் வோமென் றவரியம்பப் - பொங்குசினங்
கொண்டு முதுகொடியக் கோதையரை மோதிநனி
மண்டனில்வீழ் வித்தகன்றன் வாயு. (ச)

வாளீகமுங் கண்ணார் மனையடைந்தின் றேற்குனைப்ப
மீளியினைத் தியார்க்குமது விள்ளாது - சூளியென்போன்
பெற்ற பிரமதத்தப் பேர்மகற்குப் பேதையரை
நற்றமுறத் தந்தா னயந்து. (ரு)

பின்னர்க் குசநாபன் பேணிப் புரிமகத்தே
நன்னரெழிற் காதியெனு நாமனுற்று - னன்னவற்கு
நவ்விவிழிக் கௌசிகப்பேர் நந்தனிக்குப் பின்னுதித்தான்
றெவ்விருக்குங் கௌசிகனுஞ் சேய். (சு)

தேசிருசி கத்தவனைச் சேர்ந்தவன்வெஞ் சாபத்தாற்
கோசிகைதான் கோமதிப்பே ராறுனள் - கோசிகனும்
வேந்த னொருஞான்று வேட்டைசெய வோர்விபினஞ்
சேர்ந்துழைபின் னோடித் திரிந்து. (எ)

தானையொடு சோர்ந்து தவஞ்செய் யிடம்புகுத
யானிரங்கி வெம்பசியை யன்னவற்குந் - தேனுவினுற்
றீர்த்தபின்ன ரிக்காம தேனுவைத்தா வெற்கென்று
பார்த்தறைந்தான் வீழ்ந்தென்பதத்து. (அ)

யானுரிய னல்லே னிதற்கெனலுஞ் சேனையொடு
கோனந்தக் கோவை வளைந்தவடத் - தானிமிழ்ப்பர்
னேருதலுஞ் சிறி யிருத்துப் படையனைத்து
நாகமிசை யுற்றதவ்வா னன்கு. (கூ)

அங்கரசன் மைந்தரென தாவி கொளக்கருதிப்
புங்கமழை போந்து பொழிந்தனர்யான் - வெங்கனலி
சிந்தவிழித் தேநோக்கச் செத்தொழிந்தார் நூற்றுவருஞ்
சிந்தைகொதித் தேந்த றெரிந்து. (கo)

மேவிக் கொடும்படைகள் விட்டனனென் மீதாகண்டு
தாவிலெறழ்த் தண்டத்தை நாட்டினன்யான்-றூவுசர
மாதிச் சுதனமெலா மாக்கதுதா னுக்கிடனு
மேதிவனை வெல்வதியா மென்று. (௧௧)

மீண்டு தனதுபதி விட்டனைததங் கிழ்பாலின்
பீண்டுந் தவத்தை யியற்றிடனுந் - தாண்டசனிச்
செங்கரத்த னேவுக் திலோத்தமையாற் நீர்க்குதவ
மங்கவளைப் பின்புசபித் தாய்ந்து. (௧௨)

தென்றிசையி னேகிச் சிவன்சே வடிபட்ர்ந்து
நன்று தவமுஞற்ற நாதனனைக் - தன்றவற்கு
வேண்டும் வரமளிப்ப வீறினனக் நாட்பிருது
மாண்ட மதலைதிரி சங்கு. (௧௩)

மெய்யுடனே விண்புகுதல் வேண்மெரு ளென்றலும்யா
னையவஃதொல்லா தெனவறையத் - துய்யவனே
யெய்துவனென் னெண்ணத்தை யின்னே யடைந்துபிற
செய்தவர்பா லென்றான் றிரிந்து. (௧௪)

இன்று துரைத்தமையா னீபுலைய னுகெனயான்
சொன்னேன் புலையனுய்த் தன்பெய்தி - யென்றோடு
மாறுற்று நிற்குமந்த மாதவனைக் கண்டுரைப்ப
வீறும் விமானம் விளித்து. (௧௫)

கள்ளவிழ்தார்க் காவலனே யேறிதன்மே லென்னவிறை
பொள்ளெனவே திப்புகலும் பொன்னுடு - தள்ளிணரால்
வானவர்கள் வீழுமவன் மாமுனிவற் கோலமிட
மீனுல்கில் வேர்ணிலைவத்தான் வேர்த்து. (௧௬)

என்றே டெதிர்த்தவ் விருடி யெடுத்தவெலாங்
கொன்னே ழிந்திடலாற் கோசலர்தம்-மன்னிவன்பா
லின்றிழைந்தும் வெவ்விடர்க ளெய்திலனுல் வென்றியெனு
மன்றவிசைத் தான்வசிட்டன் மற்று. (௧௭)

மற்றதனைக் கேட்டெழுந்து வாரணவா சிக்கிறைவன்
செற்றபுல வேந்தர் திறமனைத்து - நற்றவனீ
யல்ல தவனிமிசை யாரறிய வல்லரெனச்
சொல்லிப் பணிந்தான் றுதித்து. (கஅ)

திங்களுறைக் தாங்குத் திகழ்கா சியரதிபன்
றங்க வசிட்டற் றொழுதுகொண்டு - மங்குலுற
முங்கையரிச் சந்திரனை யன்பிற் றழீஇவிடையூர்
பொங்குபடை யோடணைந்தான் போய். (க௯)

வள்ள லயோத்தியிற்பின் மாமடங்க லாசனமேல்
வெள்ளொளிமுத் தின்கவிகை மின்னவமர்ந் - தள்ளிலைவேற்
கையரசர் மந்திரியர் காலிறைஞ்சிப் போற்றமுறை
செய்திருந்தா னின்பந் திளைத்து. (உ0)

## வாழ்த்து.

வேதஞ் சிறக்கமனு நீதி விளங்கவிப்பா
ராதங்க மாறவிசும் பாஞ்சொரிக - வோதுஞ்சொற்
றூமவரிச் சந்திரன்ற னற்சரிதங் கற்குநருந்
தாமமர்க வோங்கித் தழைத்து. (உக)

உத்தரகாண்டம் முற்றிற்று. ஆ. ருஉக.

---

அரிச்சந்திரவெண்பா முற்றிற்று.

National Library.
Calcutta-27